நேஷனல் புக் டிரஸ்ட் புத்தகம்

ஜூவாலாமுகி

அனந்த கோபால சேவ்டே

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

நேஷனல் புக் டிரஸ்ட் புத்தகம்

ஜ்வாலாமுகி

1942 புரட்சி பற்றிய ஹிந்தி நாவல்

அனந்த கோபால சேவ்டே

தமிழ் வடிவம்:
கா. ஸ்ரீ. ஸ்ரீ.



பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
செய்தி ஒலிபரப்பு அமைச்சகம்
இந்திய சர்க்கார்

July 1963 (Asadha 1885)
ஜூலை 1963 (ஆஷாத 1885)

Published by arrangement with the author

விலை : ரூ. 3-00

Price : Rs. 3-00

JWALAMUKHI
(Tamil)

PUBLISHED BY THE DIRECTOR, PUBLICATIONS DIVISION, DELHI-6
AND PRINTED AT JANATHA PRESS, 66 BELLS ROAD, MADRAS-5

மக்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ வாழ்ந்து,
தாமே அடிக்கல்லாகப் புதைந்து,
தியாகமும் உயிர்வேள்வியும் செய்து,
பாரத நாட்டுச் சுதந்திரம் என்னும்
பொற்கோயிலைச் சமைத்த
பாரத வீரர்கள் அனைவருக்கும் சமர்ப்பணம்.

நன்றி

1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு புரட்சியில் ஈடுபட்டு, நான் மூன்று ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டியதாயிற்று. என் வாழ்வின் மிகச் சிறந்த, மங்கலமான காலம் இதுவே என்று கூறலாம்.

மகான் வினோபாவுடன் பழகும் வாய்ப்பு எனக்கு அங்கே கிடைத்தது.

நான் கைதாகி, நாக்பூர் சென்டிரல் ஜெயிலில் சேர்ந்த அன்று நிகழ்ந்த வினோபாவின் மாலைப் பிரார்த்தனைக் காட்சியை என்னால் மறக்கவே முடியாது.

எட்டாம் நம்பர் பாரக்! அதில் எழுபது, எண்பது அரசியல் கைதிகள் இருந்தார்கள். காரிருள்; பிசுபிசுவென்ற தூற்றல்! உள்ளே பாரக்கில் மினுமினுக்கும் மண்ணெண்ணெய் அரிக்கேன் விளக்கின் மங்கிய வெளிச்சத்தில், ஒருவரையொருவர் இன்னார் என்று அறிவதுகூட அரிது! இதிலே, வினோபாவின் சாயந்தரக் கூட்டுப் பிரார்த்தனை!

வெளியே டணல் டணல் என்று குண்டுகள் பறந்தன. சர்க்காரின் கொடுமையான அடக்குமுறை கிளர்ந்தெழுந்தது. பாரத நாட்டு மக்களின் உயிருக்கு மதிப்பே இல்லாதொழிந்தது. புரட்சியாளர்களைக் குண்டு போட்டுச் சுடுவார்களா, அல்லது தூக்கிலிடுவார்களா என்பதை நிலை

சொல்ல முடியாது. இப்படிப் பெரும் பீதியை விளைவித்த சூழ்நிலையில், நம்மை மறந்து ஆத்ம சிந்தனையில் லயிக்கச் செய்யும் அந்தப் பிரார்த்தனை!

பிரார்த்தனைக்குப் பிறகு இனிய ராம பஜனை; அதற்குப் பிறகு வினோபாவின் சின்னஞ்சிறு அறிவுரை; விஷயம் – சாவு!

சாவு நமக்கு எதிரியல்ல, நண்பனே; அமங்கலமானதல்ல, மங்கலமானதே. கடவுளைக் காண வைக்கும் நேரான செயல் அது. அதனிடம் அஞ்ச வேண்டிய தேவையே இல்லை. அது வரவேற்புக்கு உரியது! – இப்படித்தான் அன்று அவர் ஏதோ சொன்னார்.

இந்த அறிவுரைக்குப் பின்பு, அரசியல் கைதிகளான எங்கள் மனம் பெரிதும் அமைதியுற்றது என்பது எனக்கு நினைவிருக்கிறது.

அப்புறம் 1943-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வந்தது. நாக்பூர் இளைஞன் வீரத்தியாகி சங்கரனுக்கும், இளம் ஸிந்தி மாணவனை ஹேமூ கலானிக்கும் அந்த மாதத்தில் தூக்குத் தண்டனை கிடைத்தது! சங்கரனுக்கு வயது பதினெட்டு; ஹேமூவுக்குப் பத்தொன்பது. இந்த நிகழ்ச்சிகள் பாரத நாட்டு மக்களின் உள்ளத்தில் ஆழ்ந்த புண்ணை உண்டாக்கின.

இதற்குப் பிறகு 1944-45-இல் சிவ்னி சிறையில் மீண்டும் வினோபாவுடன் பழக்கம் ஏற்பட்டது. இந்தத் தடவை நான் அவரிடம் நெருங்கி வந்

தேன். கூச்சத்தினால் நான் தொலைவில் ஓட ஓட, அவர் தமது நல்லுள்ளத்தினாலும் பேரன்பினாலும் என்னைக் கைப்பிடித்துத் தம் அருகில் அமர்த்தி வைத்துக்கொண்டார்.

நான் என்றும் நினைவில் வைக்க வேண்டிய நாட்கள் அவை. காலை ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரையில் நாங்கள் இருவரும் சிவ்னி சிறையின் குறுகிய வெளியில், இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாகச் சுற்றிச் சுற்றி உலவுவோம். உடற் பயிற்சியுடன், சிந்தனைப் பரிவர்த்தனையும் நடந்தது.

யாரிடம் எந்த இயல்பு இருக்கிறதோ, குணம் இருக்கிறதோ, அதன் மலர்ச்சிக்கு உதவுவதே வினோபாவின் தனிப் பண்பு. தனி மனிதனின் சுதந்திரத்தை அவர் தீவிரமாகப் போற்றுகிறவர்; யாரையும் தட்டி உருட்டிச் சரிப்படுத்தி ஒரே அச்சில் வார்க்க அவர் ஒருபொழுதும் முயற்சி செய்வதில்லை. சுய தூண்டுதலுடனும், சுய அனுபவத்துடனும் நடந்து கொள்பவர்களே அவருக்குப் பிரியமானவர்கள்.

பெரும்பாலும் நாங்கள் ஆராய்ந்து பேசிய விஷயம் - இலக்கியம்! இலக்கியத்துக்குத் தூண்டுதல் என்ன, காரணம் என்ன, அதன் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் முதலியவை பற்றிப் பேசுவோம். கோர்க்கி, டால்ஸ்டாய், ரொமேன் ரோலான், விக்டர் ஹ்யூகோ, டூமா, வியாச முனிவர், ஞானேசுவரர், ரவீந்திரர், கீதை,

இராமாயணம், மகாபாரதம், பைபிள் - இப்படி உலகத்தின் பெரிய இலக்கியகர்த்தாக்களைப் பற்றியும் இலக்கியங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நடை பெறும். வினோபாவின் பரந்த பயிற்சியைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். நான் எதிர்பாராத அளவுக்கு, அவருடைய இலக்கியப் பார்வை மிகவும் ரசமாகவும் ஆழமாகவும் கூர்மையாகவும் இருந்தது. பல திசைகளில் செல்லும் அவருடைய இலக்கிய வல்லமையைக் கண்டதும், 'உண்மையில் இவர் ஒரு மகரிஷி' என்றே எனக்குத் தோன்றியது.

அந்த நீண்ட, இடைவிடாத இலக்கியப் பேச்சுக்களிடையே, 'எரிமலை' என்ற இந்த நாவலின் கற்பனை வடிவெடுத்தது. இதை எழுதிய பொழுது, சிறை வாழ்க்கையின் இனிப்பும் கசப்பு மான எத்தனையோ நினைவுகள் என்முன் வந்து போயின; அதனுடன் ஒரு நினைவு மிகவும் தெளி வாக எழுந்தது — அதுதான் வினோபாவின் சிநேகம் நிரம்பியதும் பரிவு மிகுந்ததுமான வடிவம் —ஆசியைப் போல நன்மை தருவது, கர்ப்பூர ஆரத்தியைப் போல மங்கலமானது!

அவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கவே இந்த வரிகளை எழுதுகிறேன்.

என் உணர்ச்சிகளைப் பற்றி அவருக்கு ஒருகால் தெரியாமலே இருக்கலாம். கங்கை ஓடுகிறது; தனது நீரைத் தீண்டியோ அருந்தியோ எவன் என்ன பேறு பெறுகிறான் என்பது பற்றி அதற்கு என்ன கவலை!

— அனந்த கோபால சேவ்டே

1

இன்று அபயகுமாரனுக்குத் திருமணம். அவனுடைய உள்ளத்தில் உவகையும் பூரிப்பும் நிலவின.

இது இயல்புதானே? இன்று, அவனுடைய உள்ளத்து அரசியான விஜயா உலகியலின்படி 'அவனுடையவள்' ஆகப் போகிறாள். உள்ளத்தினால் அவள் முன்பே அவனுக்கே உரியவளாகி விட்டாள்; அவனும் அவளுக்கு உரியவனானான். ஆயினும் இன்று அந்தணர்களின் முன்னிலையில், வேதமந்திரங்களின் புனித ஒலி அத்தாட்சி பகர, சமூகத்துக்கும் உலகத்துக்கும் எதிரில், அவர்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுத் தம்மவராக்கிக்கொள்ளப் போகிறார்கள் — வாழ்விலும் சரி; இயலுமானால் சாவில் துணையிருக்கவும் சரி! அவர்களின் ஆழ்ந்த காதல் இன்று நிறைவேறப் போகிறது.

இது நடக்காது என்று தோன்றிய ஒரு காலமும் உண்டு. வழியில் இருந்த இடுக்கண்கள், அவர்கள் இருவரும் சந்திப்பதற்குத் தடைச்சுவராக நின்று, அவர்களது உள்ளத்து ஆவல்களையும் உணர்ச்சிகளையும் தகர்த்தெறிவதில் முனைந்திருந்தன. ஏனெனில் விஜயாவின் சிற்றப்பா, தமது பாதுகாப்பில் இருந்த அண்ணன் மகளை — படிப்பும் அழகும் ஆரோக்கியமும் ஒருங்கே வாய்ந்திருந்த விஜயாவை — ஏழை இளைஞனை அபய

னுக்கு மணஞ்செய்விக்க அறவே ஒப்பவில்லை. அவனுடைய விதவைத் தாய் பிறர் வீடுகளில் வேலை செய்து வயிறு வளர்த்து வந்தாள்; தன் வாயையும் வயிற்றையும் கட்டி அவள் அபயனைப் படிக்க வைத்தாள். அவளுடைய தவத்தின் பயனாக, அபயன் படித்து எம்.ஏ. ஆகி, இன்று நாகபுரிப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவனாகப் பயின்று, பி.எச். டி. பட்டம் பெறுவதற்காகத் 'தீஸிஸ்' (ஆய்வு நூல்) எழுதி வருகிறான்.

ஆனால் இதெல்லாம் விஜயாவின் சிற்றப்பாவுக்குப் போதாது. அவர் மத்திய மாகாணத்து 'ஸிவில் ஸர்விஸி'ல் அடிஷனல் மாஜிஸ்திரேட்டாக இருப்பவர். இப்பொழுது ஈ. ஏ. ஸி.யாக இருக்க வேண்டும்; வருங்காலத்தில் முழுக்க முழுக்க மாஜிஸ்திரேட்டு ஆகக்கூடியவனாக இருக்க வேண்டும் — அத்தகைய இளைஞனுக்கே அவர் அவளை மணஞ் செய்விக்க விரும்பினார். இதைவிட உயர்ந்த வரனைக் கற்பனை செய்து பார்ப்பது அவரால் இயலாத காரியம்.

விஜயாவும் ஒரு விந்தையான பெண். தன் சிற்றப்பாவின் இந்தப் பேருதவியில் அவள் துளியும் பட்டுக்கொள்ளாமலே இருக்கிறாள்; 'மாஜிஸ்திரேட்டின் மனைவி'யாக வேண்டும் என்ற ஆசை அவளைத் தீண்டியதாகக்கூடத் தெரியவில்லை. ஏனோ அவளுக்கு அபயன்தான் பிரியமாக இருந்தான்; வேறோர் ஆண்மகனைக் காதலனாகவோ கணவனாகவோ கற்பனை செய்து

பார்க்கவும் அவளால் முடியவில்லை. 'அறியாத பெண்; தனக்கு எது நல்லது கெட்டது என்றுகூடத் தெரியவில்லை. இவளிடம் மாஜிஸ்திரேட்டுப் பதவியைப் புகழ்வது, எருமையின் முன்னால் வீணை வாசிப்பது போல' என்று மாஜிஸ்திரேட்டு நினைத்தார்.

விஜயா மாரிஸ் கல்லூரியில் ஸீனியர் பி.ஏ. யில் படிக்கிறாள். ஆனால் அவள் படிக்கிற இனத்தைச் சேர்ந்தவள்; அதாவது ஆடல் பாடல், பவுடர், உதட்டுச் சாயம் இவற்றிலிருந்து அறவே விலகியவள். நிறையப் படிப்பாள்; சில சமயம் எழுதுவதும் உண்டு. அவள் கதைகளுக்கும் கவிதைகளுக்கும் ஹிந்தி மாதப் பத்திரிகைகள் சிலவற்றில் நல்ல மதிப்பு உண்டு. தேர்வுக்குரிய நூல்களைப் பயிலுவதோடு நில்லாமல், எழுத்துக் கலை பற்றிய ஆராய்ச்சிப் புத்தகங்களையும் உயர்ந்த இலக்கியப் படைப்புக்களையும் படிப்பதிலும், தானே எழுதுவதிலும் அவளுக்குப் பொழுது சரியாக இருந்தது. ஆகவே, அவள் வகுப்பு முடிந்ததும் நேரே யூனிவர்ஸிடி லைப்ரரிக்குப் போய் அங்கே இரண்டொரு மணி நேரமாவது தங்காமல் வீடு திரும்ப மாட்டாள்.

இந்த நூல் நிலையந்தான் அவளுடைய வாழ்வில் மிகுந்த பெருமை பெற்றது; ஏனெனில் இங்கேதான் அவள் அபயகுமாரனை முதலில் சந்தித்தாள். அவன் ஆராய்ச்சி மாணவன்;

எனவே அவன் நூல் நிலையத்தைப் புகலடைய வில்லையென்றால் வேறு யார் அடைவார்கள்?

ஆகவே அவன் பெரும்பாலும் அங்கேதான் அமர்ந்திருப்பான். புத்தகங்களில் மூளையைச் செலுத்தி, தனக்குத் தேவையான குறிப்புக்களை எழுதிக்கொள்வான்.

அங்கே தற்செயலாக அவன் பார்வை விஜயாவின்மேல் விழுந்தது. படிப்பில் முனைந்த சுபாவமுள்ளவளாதலால் அவள் பிற பெண்களினின்றும் வேறுபட்டவளாக, முற்றும் மாறுபட்டவளாகத் தோற்றினாள்.

அறிமுகம் ஆயிற்று; மெல்ல மெல்ல அதிலிருந்து அன்பு முளைவிட்டது. 'மணஞ்செய்து கொண்டால் நாம் இருவருமே மணப்போம்; இல்லையானால் வாழ்நாள் முழுதும் மணமில்லாமலே இருப்போம்' என்று ஓர் ஆண்டுக்குள்ளேயே அவர்கள் தமக்குள் உறுதிமொழி கூறிக்கொண்டார்கள்.

மணமில்லாமல் இருக்கும் பேச்சு ஏன் வந்தது என்றால், 'நம் தந்தை இறந்ததும் மூன்றும் பிராயத்திலிருந்து நம்மை எடுத்து வளர்த்து ஆளாக்கிய சிற்றப்பா நமக்கு இந்த விடுதலையை அளிக்கக் கட்டாயம் பின்வாங்குவார்' என்பதை விஜயா அறிந்திருந்ததனால்தான். அவர் ஒரு கால் அவளை நிர்ப்பந்தப்படுத்தலாம் — மாஜிஸ்திரேட்டு ஆச்சே! அந்த நிர்ப்பந்தத்தை எதிர்த்துப் போராடியுங்கூட இந்த மணம் நிறைவேறுவது

சாத்தியமில்லை என்றுல் வாழ்நாள் முழுவதும் மணமின்றியே அவள் இருந்துவிடுவாளே தவிர, தான் வழிபடும் தெய்வத்துக்கு ஒருபோதும் நம்பிக் கைத் துரோகம் இழைக்க மாட்டாள்.

ஆனல் 'மாஜிஸ்திரேட்டு ஐயா அந்த அளவுக் குப் பிடிவாதம் செய்யவில்லை. நாலைந்து தடவை இதமாகச் சொன்னர்; வேலையில் இருந்த, முன் னுக்கு வரக்கூடிய இளைஞர்களை இரண்டொரு தடவை தம் வீட்டில் தேநீர் விருந்துக்கு அழைத்து அவள் முன்னல் நிற்க வைத்தார்; ஆனல் அவள் அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. "போகட்டும், சாகட்டும்; அவள் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதுதான் நடக்கும். கல் யாணமாகிவிட்டால் என் பொறுப்பாவது குறை யும்" என்று மாஜிஸ்திரேட்டு சொன்னர்.

அபயகுமாரனை அவருக்கு அடியோடு பிடிக்க வில்லை என்பதில்லை. அவன் நல்ல ஆரோக்கிய முள்ளவன், அழகன், சிவப்பு நிறம், இளவயது; அவனுடைய வெள்ளைச் சிரிப்புக்கு யார் மனத்தை யும் கவரும் வல்லமை இருந்தது. அவனுடைய தாய் ஏழைதான் என்றுலும், இவ்வளவு படித்த இளைஞன் தன்னையும் தன் மனைவியையும் அன்னை யையும் எப்படியாவது காப்பாற்றிவிடுவான். ஆனல், அவருக்கு அவனிடம் தென்பட்ட மிகப் பெரிய குறை, அவன் 'எக்ஸிக்யூடிவ் டிபார்ட் மெண்டி'ல் எந்தப் பதவியிலும் இல்லையே என்பது

தான். இரண்டாவது குறை, அவன் கதர் அணிந்து வந்தான் என்பது.

ஆயினும் கடைசியில் அவர் தம்முடைய விருப்பத்துக்கு மாறுக, விஜயாவும் அபயனும் மணந்து கொள்ள அநுமதி அளித்துவிட்டார்.

இன்று அந்தத் திருமணம் நடைபெறுகிறது. விஜயாவின் இன்பத்துக்கும் உற்சாகத்துக்கும் எல்லையே இல்லை. அபயனைப் பார்த்தது முதல் அவள் அவனைத் தன் உள்ளமாம் அரியணையில் வீற்றிருக்கச் செய்து எப்போதும் வழிபட்டிருக்கிறாள். அவனுடைய காதல் அவளுக்கு மாயாத இளமையைத் தந்துவிட்டது. அவனுடைய கமலப் பாதம் பட்டு, அந்தச் சிலை உயிர்பெற்று எழுந்தது போலும்!

அபயனும் இதே நிலையில்தான் இருந்தான். விஜயாவின் கள்ளங்கபடமற்ற அன்பு, அவனுடைய எழுச்சிக்கும் கற்பனைக்கும் ஒப்பற்ற வலிமையைத் தந்து, புகழும் வீரமும் பெரும் பயனும் விளைக்கும் செயலையாற்றுவதற்கு அவனைத் தூண்டியது. என்றுமில்லாத ஓர் உயிராற்றல் அவன் வாழ்வில் நிரம்பிவிட்டது.

எத்தனையோ தடவை இருவரும் தனிமையில் சந்தித்திருக்கிறார்கள்; ஆயினும் ஒரு தடவையாவது அவனை அவளோ அவளை அவனோ எல்லையை மீறியதில்லை; அவர்கள் தமது தெய்விக அன்பில் மாசின்றி நடந்துகொண்டார்கள். கோயிலில் வழிபாட்டுக்குச் செல்லும்போது உண்மைப்

பக்தன் எப்படி விகார மனப்பான்மை வைத்துக் கொள்ள முடியும்?

திருமணப் பந்தலில் மறைகளை ஓதி ஓமம் நடந்துகொண் டிருந்தது; அதே சமயத்தில், எவனோ ஒருவன் வந்து, "ஜப்பானியர் சிங்கப் பூருக்கு அருகில் இரண்டு ஆங்கிலேயக் கப்பல் களை மூழ்கடித்துப் போர் முழக்கம் செய்து விட்டார்கள்" என்ற செய்தியைத் தெரிவித்தான்.

2

திருமணச் சடங்குகள் யாவும் முடிந்து, விருந்தினர் தங்கள் வீட்டுக்குப் போய்விட்ட பின்பு அபயன், "வா விஜயா, நாம் போய் அம்மாவின் ஆசியைப் பெறுவோம்" என்றான்.

"இருக்கட்டும், அபயா. முதலில் பூசையறை யில் சென்று ஆண்டவனிடம் விளக்கேற்றிக் கர்ப் பூர ஆரத்தி செய்துவிட்டு என்னிடம் வாருங்கள். ஆண்டவன் இருப்பதனால்தானே இந்த நாளை எனக்குப் பார்க்கக் கிடைத்தது!" என்று அன்னை தழுதழுத்த குரலில் பேசினாள்.

தம்பதிகள் பூசையறைக்குச் சென்று நந்தா விளக்கில் கர்ப்பூரமேற்றிக் கடவுளை வழிபட்டனர். இருவரின் உள்ளமும் உணர்ச்சியில் ஆழ்ந் திருந்தது. அவர்களுடைய கண்களில் ஆனந்தக்

கண்ணீர் துளும்பியது. அவர்கள் மௌனமாக இருந்தார்கள்; ஆனால் உள்மனம் ஒரே குரலில், 'தெய்வமே, முற்பிறவியில் நாங்கள் செய்த எந்த நற்செயலினாலோ இன்றைய இந்த நல் வேளை தோன்றியிருக்கிறது. எங்களுடைய இந்த இணைப்பு நீண்ட காலம் நிலவ வேண்டும். ஆண்டவனே! நாங்கள் இருவரும் ஒருவருக்குள் மற்றவர் முற்றும் லயித்து உனக்குத் தொண்டாற்ற வேண்டும்; உன் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும்' என்று கூறியது.

இவ்வாறு அவர்கள் தன்மயமாகி வழிபாட்டில் ஈடுபட்டிருக்கையில், நந்தாவிளக்கு ஏதோ திடீர் அதிர்ச்சியினால் விழுந்து, அதன் சோதி அணைந்து விட்டது.

விஜயாவின் மனம் திக்கென்றது. இது அபசகுனம் என்று அவளுக்குத் தோன்றிற்று. என்ன ஆபத்து வரப்போகிறதோ என்ற திகிலில் அவள் உள்ளம் நடுங்கியது.

3

அன்னையின் ஆசியைப் பெற்று இருவரும் படுக்கையறைக்குச் சென்றார்கள்.

தனிமை கிடைத்ததுமே விஜயா, "உங்களைத் தான்! எனக்கு என்னவோ மிகவும் பயமாக

இருக்கிறது. விளக்கு அணைந்த அபசகுனம், வரப்போகும் ஏதோ ஆபத்தைக் குறிக்கிறது" என்றாள்.

"பைத்தியமே!" என்று கூறி, அவன் அவளைத் தன் அருகில் இழுத்துக்கொண்டு, "இந்த அபசகுனத்தில் புதுமை என்ன இருக்கிறது? இன்று உலகம் முழுவதிலுமே அபசகுனமென்னும் பூச்சாண்டி தாண்டவமாடுகிறது. போரின் பயங்கரத் தீக்கொழுந்துகள் அகில உலகையும் கவ்வியிருக்கின்றன. மனிதன் மனிதனைக் கொல்கிறான். அரியணைகள் கவிழ்கின்றன. தேசப் படங்கள் மாறுகின்றன. மனிதத்தன்மை அழிந்து கொண்டிருக்கிறது. எங்கும் பரந்ததும் பயங்கரமுமான இத்தகைய பெரிய அபசகுனம் இருக்க, வேறு என்ன ஆபத்து நிகழக்கூடும்?" என்றான்.

"இல்லை அய்யரே, அந்தப் போர்த் தீ இன்னமும் நம்மிடமிருந்து தொலைவில் இருக்கிறது. ஆனால் இன்றைய இந்த அபசகுனம் நம் வீட்டிலேயே ஆகியிருக்கிறதே. நிலைப்பதற்கு முன்பே நம் குடித்தனம் கலைந்துவிடுமோ என்னவோ, தெரியவில்லையே?"

"தீ தொலைவில் எங்கிருக்கிறது, விஜயா? ஜப்பானியர் சிங்கப்பூரைத் தாக்கியிருக்கும் செய்தி இன்று உன் காதில் விழவில்லையா? உலகம் முழுவதும் பரவிய இந்தப் பெரும்போர் இப்போது நம் நாட்டு வாசலுக்கே வந்துவிட்டது. இதுவரைக்கும் அது ஐரோப்பாவோடு நின்றிருந்தது;

ஆனால் இப்போது கிழக்கு நாடுகளிலும் அதன் கருமுகில்கள் சூழ்ந்துவிட்டன; அதன் ஆழ்ந்த நிழல் நம் நாட்டின்மீதும் வட்டமிடுகிறது. பயங்கரமான இந்தப் போரினின்று நாம் இன்னும் எத்தனை நாளைக்குத் தப்ப முடியும்?"

"ஆயினும் சண்டை இன்னமும் நமது பாரத நாட்டில் உருக் காட்டவில்லையே. நம் தலைவர்கள் போரைப் பற்றிய கொள்கையை வெளியிட்டிருக்கிறார்களே – 'விடுதலை பெறுத வரையில் இந்தப் போரில் இந்தியா கலந்துகொள்ளாது' என்று" என்றாள் விஜயா.

"ஆம், இது உண்மை. ஆனால் நம் நாட்டின் துரதிருஷ்டத்தைப் பாரேன்; மக்கள் தம் உயிரினும் இனியதாகக் கருதும் நம் தலைவர்களின் கருத்துக்கு ஏதும் மதிப்பில்லையே! ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியான வைஸிராய், இந்தியரின் பெயரால், அவர்களும் இங்கிலாந்தின் சார்பில் இந்தப் போரில் கலந்துகொண்டிருப்பதாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறார். இதைப் பற்றி நம்மைக் கேட்கவும் இல்லை; நாட்டின் பிரதிநிதி ஸ்தாபனமான காங்கிரசின் அபிப்பிராயத்துக்குத் துளி மதிப்புத் தரவும் இல்லை. இத்தகைய கொடிய அவமானத்தை, சுய மதிப்புள்ள எந்த இந்தியன் பொறுத்துக் கொள்வான்? நமது அடிமைத்தனத்தின் இந்த விகாரமான, தெளிவான அத்தாட்சியைக் கண்டு, இன்று இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவனுடைய உள்ளத்

திலும் இந்த விஷ அம்பு தைத்துத் துளைப்பதில் என்ன வியப்பு இருக்கிறது?''

''இந்தியன் ஒவ்வொருவனுடைய உள்ளத் திலும் இது தைப்பதேது, அபயரே? அப்படி யிருந்தால் போர்த் தளவாடங்கள் சேர்ப்பதிலே நம் நாட்டில் இத்தனை சர்க்கார் உத்தியோகஸ்தர் களும் அரசியல் கட்சியினரும் ஏன் முனைகிறார்கள்? இந்த இந்தியர்கள் ஒத்துழைக்கவில்லை யென்றால், அற்ப எண்ணிக்கையுள்ள ஆங்கிலே யர், போரில் ஈடுபடுவது கிடக்கட்டும், இந்தப் பரந்த நாட்டை எப்படி ஆள முடியும்?'' என்றாள் விஜயா.

''நீ சொல்வது சரி, விஜயா. நமது நாட்டின் மிகப் பெரிய பலவீனம் இதுதான். நம் நாட்டினரே நம் அடிமைத் தளைகளை உறுதிப்படுத்த உதவு கிறார்களே, இதுதான் மிகப் பெரிய மாசு. இதனால் தான் காந்தியடிகளின் தியாகமும் ஒளிபொருந்திய தலைமையும் இன்று எந்த அளவுக்கு வெற்றியைக் கொண்டுவர வேண்டுமோ அவ்வளவு கொண்டு வரவில்லை. நம் தாய்மார்களின் மானத்தையும் சகோதரிகளின் கற்பையும் வெள்ளைக்காரச் சிப் பாய்கள் தாக்கியபோதிலுங்கூட, அதைத் தாராளப் பான்மையுடன் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற உபதேசத்தை நம்மவரே தரும் அளவுக்கு நம் நாட்டின் சூழ்நிலை வீழ்ச்சியடைந் திருக்கிறது. வாய்க்குப் பூட்டு இட்டிருக்கிறார்கள்; பேனாவுக்குத் தடைச் சங்கிலி இட்டிருக்கிறார்கள்.

நாம் மானத்துடன் சாகவும் முடியாது! இதோ இவ்வளவு பெரிய போர் நடக்கிறதே, இதையே பாரேன். இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் இளைஞர்கள் விடுதலையின் பெயரால் போரிடுகிறார்கள்; போரிட்டுக்கொண்டே மடிகிறார்கள்; ஆனால் நம் தாய்நாட்டில் இவ்வளவு கோரமான இடுக்கண்கள் சூழ்ந்து வந்திருக்கும் நிலையிலும், உலகமெங்கும் பரந்த இந்தப் புரட்சியிலே பழைய உலகுக்கு முடிவு கட்டிப் புது உலகை நிறுவ நாம் துளியும் உதவாதபடி நம்மை முடமாக்கி வைத்திருக்கிறார்கள். நம்மைச் சாக விடவில்லை; அதனால்தான் உயிரோடு இருக்கிறோம். இவ்வளவு இழிவான வாழ்க்கையை இந்த நாடு எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக்கொண்டு இருக்கப் போகிறது? மகரிஷிகளும் முனிவர்களும் வாழ்ந்த இந்தப் புண்ணிய வீர நாட்டில், இவ்வளவு கொடுமையான இடிந்த நிலை ஒருபோதும் ஏற்பட்டதில்லை.''

''ஆனால் இன்று அது ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதே, அபயரே. நாற்புறமும் இருளைத் தவிர எனக்கு வேறு ஒன்றுமே புலப்படவில்லை. பாரதநாடு முழுவதுமே மயானமாகிவிட்டாற்போல இருக்கிறது'' என்றாள் விஜயா.

''இல்லை விஜயா, இது மயான அமைதியல்ல. புயலுக்கு முந்திய அமைதி இது. நிலைமை இந்தப் பேரெல்லைக்கு வந்துவிடும்போது அதன் விளைவும் பயங்கரமாகத்தான் இருக்கும். இது இயற்கை

யின் முடிந்த முடிபான உண்மை; சரித்திரம் இதற்கு அத்தாட்சி. இந்தப் பாரத நாட்டிலும் இது நடந்தே தீரும்.”

“என்ன நடக்கும், அபயரே?”

“என்ன நடக்குமா? கடுமையான புரட்சி நடக்கும்; அதன் தீக்கொழுந்துகள் இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தைச் சாம்பலாக்கிவிடும். இதில், பாரத நாட்டின் மனிதத் தன்மையும் சாம்பலாகலாம்; ஏனென்றால், மிருகபலத்தின் முன்பு ஆன்மிகச் சக்தி கணப்பொழுதுக்குத் தோல்வியுறக் கூடும். ஆனால் இப்படி அனைத்தும் அழிந்து போவது, இந்த ஆண்மையற்ற அவமான வாழ்வைவிட எவ்வளவோ மேலானது; ஒளி பொருந்தியது. ஏனெனில், இந்த ஆன்மிகத் தியாகமென்னும் சாம்பலின் மீதுதான் நமது புது மாளிகை எழும்பும். உண்மையான தூய பற்றுடன் செய்யும் தியாகம் என்றும் வீணாகாது. விஜயா, இதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.”

“இத்தனை பெரிய தியாகத்துக்கு நம் நாடு தயாராக இருக்கிறதா? அப்படியானால் இவ்வளவு தன்னல அவாவும், இவ்வளவு பயங்கொள்ளித்தனமும், இவ்வளவு வீழ்ச்சியும் எங்கும் பரவியிருப்பானேன்?” என்று கேட்டாள் விஜயா.

“நாடு ஆயத்தமாக இல்லையென்று யார் சொல்வது?”—அபயன் திகைத்துப் போய், படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

கூண்டில் அடைபட்ட புலிபோல, அறையில் இங்குமங்கும் வேகமாக உலவலானான்; "நாட்டின் மனத்தை அறிபவர், காந்தியடிகளைத் தவிர வேறு யாருமில்லை. நாட்டில் தியாகம் இல்லை என்று இதுவரை அவர் சொல்லவில்லையே. என்னைப் போன்ற லட்சக்கணக்கான இளைஞர்கள் தியாகத்துக்குத் தயாராக இருக்கிறார்கள். நான் நாட்டுக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கச் சித்தமாக இருக்கிறேன். மனித வாழ்க்கை ஒரு தடவைதான் கிடைக்கிறது; எப்போதாயினும் அதை இழக்கத்தான் வேண்டும். எனவே, நாட்டுக்காக அதை ஏன் துறக்கக்கூடாது? இதனிலும் அழகிய, இதனிலும் மேன்மையான சாவு ஏது?"

சாவு என்ற பெயரைக் கேட்டதுமே விஜயாவின் உள்ளம் நடுங்கியது. இன்று அவளது இல்லற வாழ்வின் முதல் இரவு; இன்று இந்தச் சாவுப் பேச்சு ஏன்?

கர்ப்பூர ஆரத்தி அணைந்த அபசகுனம் அவளுக்கு மீண்டும் நினைவுக்கு வந்தது; அவளது உள்ளம் திடுக்கிட்டது. 'இறைவா, உன் மனத்தில் இருப்பதை நீயே அறிவாய். ஆனால் எது எப்படி ஆனாலும், எனது இந்தச் சந்திப்பின் இனிய கணத்தை அழிவற்றதாக்கி, என் உயிருக்கு ஒளியான அபயரைக் காத்தருள வேண்டும்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

ஆனால், 'இது தன்னைத் தானே சாம்பலாக்கிக்கொள்வதோடு நில்லாமல், அக்கம்பக்கத்து

உலகையும் நீருக்கும் அணையாத நெருப்பு' என்பதை அவளுடைய அக உள்ளம் உணர்ந்தது. வீட்டுக்குக் கொள்ளி வைக்க வேண்டுமென்று பேசுகிறவன், எப்படிப் பாதுகாப்போடு இருக்க முடியும்?

எதிரே அபயன், அமைதியின்றி, ஆழ்ந்த சிந்தனையுடன், கூண்டுப் புலி போல அறையில் சுற்றிச் சுற்றி வந்தான்.

அவனுடைய கடுமையான உள்ளப் போராட்டத்தைக் கண்டு, அவள் உள்ளம் விண்டு வேதனையுற்றது. "இரவு வெகு நேரம் கடந்து விட்டது, அபயரே. சற்றுத் தூங்குங்களேன்" என்றாள்.

இப்படியே பேசிக்கொண்டிருந்தால் பொழுது விடிந்துவிடுமோ என்று அவள் கவலைப் பட்டாள். அபயனுடைய மனக் கலக்கத்தையும் அக வேதனையையும் அவளால் பார்க்க முடிய வில்லை. வலுக் கட்டாயமாக அவனைத் தன் படுக்கையில் படுத்துக்கொள்ள வற்புறுத்தினாள்; அவன் தலையைத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். மிகுந்த அன்புடன் அவனது தலையை அணைத்தபோது, கடுமையான சிந்தனைப் போராட்டத்தினால் அவன் மண்டை கொதித்ததை உணர்ந்தாள். அவள் உள்ளத்தில் துயரம் நிரம்பியது. அன்பும் உருக்கமும் பொங்கின. அவனுடைய நெற்றியைத் தன்புறம் திருப்பி முத்தமிட்டாள்.

அபயனின் உள்ளத்திலிருந்து நன்றிப் பெரு மூச்சு வெளிவந்தது. அந்த அணைப்பிலே ஒப் பற்ற ஆறுதல் பெற்று அவன் கண்ணசைந்தான்.

விஜயா அவன் கையை எடுத்துத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டாள்.

4

1941-ஆம் ஆண்டு டிசம்பரில், சிங்கப்பூர்த் துறைமுகத்தில் இரண்டு ஆங்கிலேயக் கப்பல்களை ஜப்பான் மூழ்கடித்தபோது, 'உலகப் பெரும் போர் நமது வாசற்கதவைத் தட்டுகிறது' என்று கருதும்படியான சூழ் நிலை இந்தியாவில் ஏற் பட்டது. வங்கத்திலும் இந்தியாவின் கிழக்குக் கரையிலும் மக்கள் பயந்தோடும் கலவரம். கல்கத்தா நகரம் காலியாயிற்று.

நாடு முழுதிலும் விந்தையான ஒரு கிளர்ச்சி. அற்புதமான ஒரு சூடு பரவியது: 'இனி நாம் ஏதாவது செய்யத்தான் வேண்டும். இப்படியே கையைக் கட்டிக்கொண்டு எத்தனை நாளைக்கு உட்கார்ந்திருப்பது? உலகில் இவ்வளவு பயங்கர நிகழ்ச்சிகள் நடக்கின்றன. உலகமே தடுமாறும் பெரிய புரட்சி நடக்கிறது. புது உலகம், வாழ்வு பெறுவதற்காகப் பிரசவ வேதனையில் துடிக்கிறது. இந்த நிலைமையில்

நாம் ஒன்றுமே செய்யப் போவதில்லையா? சரித்திரத்தின் ஏடுகளில் நம் பெயரே இல்லாமற் போய்விடுமோ?

'ஆனால் நாம் என்னதான் செய்வது?

'எவ்வளவோ செய்ய விரும்புகிறோம்; ஆனால் யாராவது செய்ய விட்டால்தானே? தம்மைப் பொறுத்தவரையில், நமக்குள் நாம் யார்? நாம் ஒன்றுமே இல்லை. இவ்வளவு பெரிய நாடு நம்முடையது. ஆயிரமாயிரம் ஆண்டுகளின் பரம்பரையும் நாகரிகமும் அதில் பதிந்திருக்கின்றன. ஒரு காலத்தில் உலகம் முழுவதற்கும் அது ஒளி தந்தது. ஆனால் இன்று அது என்ன? கைப்பிடியளவு ஆங்கிலேயர்கள் அதை அடிமையாக்கி வைத்திருக்கிறார்கள். நம்மிடையே பெரிய பெரிய தலைவர்கள் இருக்கிறார்கள்; இலக்கிய மேதைகள் இருக்கிறார்கள்; கலைஞர்கள் இருக்கிறார்கள்; சிந்தனையாளர்கள் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களை யாரும் மதிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் அடிமை நாட்டில் வாழ்கிறவர்கள்.

'உங்கள் அபிப்பிராயம் என்ன என்று நம்மைக் கேட்கக்கூட இல்லை. நாமும் ஆங்கிலேயரோடு போரில் கலந்திருப்பதாக, பிணைந்திருப்பதாக, உலகின் முன்னால் பறைசாற்றியாயிற்று. வீழ்ந்த, மறுவுற்ற, பராதீனமான ஒரு நாட்டுக்குச் சுதந்திர நிலை என்பது ஏது? வெள்ளையனை ஒரு சாதாரணச் சிப்பாய், நம்

பெருந்தலைவரான காந்தியடிகளை விடப் பெரு மதிப்புக் கொண்டிருக்கிறான். ஆயினும் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இவ்வளவு பெரிய நாட்டிலே பிணை அமைதி பரந்திருக்கிறது; பேடித்தன்மை வந்திருக்கிறது.'

ஆனால் போர்க் கிளர்ச்சியில் பங்குகொள்ள, நாடு ஆவல் கொண்டிருந்தது. அது சொன்னது இவ்வளவுதான்— "நீங்கள் குடியாட்சிக்காகவும் விடுதலைக்காகவுந்தானே போரில் இறங்கியிருக்கிறீர்கள்? போலந்தை ஜர்மனி தாக்கியது என்பதற்காகத்தானே ஆயுதம் தாங்கியிருக்கிறீர்கள்? அதற்காகத்தானே இவ்வளவு இரத்த வெள்ளம்? அப்படியானால், ஒரு துளி இரத்தம் சிந்தாமலே, பேனாவின் ஒரு கீற்றினால் நீங்கள் இந்த நாட்டுக்கு விடுதலை தர முடியுமே; அதை ஏன் செய்யவில்லை? இப்போது அதைச் செய்யாமல், வருங் காலத்தில் செய்வோம் என்று தவணை போடுகிறீர்கள். அதை எப்படி நம்புவது? நாங்கள் விடுதலை பெற்றுவிட்டால் உங்கள் போர் என்ன ஆகுமோ என்று நம்பிக்கையற்றிருக்கிறீர்கள். எங்கள் உதவி இல்லையென்றால் இருபுறமும் ஏமாற்றமாகுமே என்று கருதுகிறீர்கள். அதற்காக உங்களுடன் ஓர் உடன்படிக்கையில் கட்டுப்பட நாங்கள் தயார். நீங்கள் எங்களுக்கு விடுதலை தந்ததும், உங்கள் போரை நாங்கள் எங்கள் போராகக் கருதி எங்கள் குருதியைப் பாய்ச்சத் தயாராக இருக்கிறோம்."

நாட்டின் இந்தப் பேச்சு, எவ்வகையிலும் பயன் தரவில்லை. ஆங்கிலேயர் இதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஏதாவது செய்ய வேண்டும் என்று நாடு ஆவல் கொண்டிருந்தும், ஆங்கில ஆட்சியாளர்கள் அதை ஒன்றும் செய்ய விடவில்லை. அவர்கள் தமது ஆட்சியைப் பின்னும் வலுப்படுத்திக்கொண்டு, 'போருக்குப் பின்பு நாங்கள் இதைச் செய்வோம், அதைச் செய்வோம்' என்று ஆயிரம் பேரங்கள் பேசினர்கள்; ஒன்றும் கூடி வரவில்லை. இதன் விளைவாக, அவர்களுக்கும் மக்களுக்குமிடையே இருந்த வேற்றுமை யகழி பின்னும் அகலமாயிற்று. நாட்டிலே துயில் கொண்டிருந்த வீரம், ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்பியது; ஆனல் அயல்நாட்டு ஆட்சியாளர்கள் அதற்கேற்ற சூழ் நிலையை உண்டாக்கவில்லை.

நாட்டின் மூச்சு இப்படியே முட்டிக்கொண் டிருந்தால் அது பிணமாகிவிடும்; பிறகு அதை யாரும் தட்டியெழுப்ப முடியாது என்று காந்தி கருதினர். நாற்புறமும் பயம் குடிகொண்டிருக் கிறது. ஆங்கிலேயரை எதிர்க்க எவனுக்கும் துணிச்சல் இல்லை; ஆனல் அவர்களுக்குப் போரில் உதவத் தயார். படையில் சேர இளைஞர்கள் ஆவலோடு இருக்கிறர்கள். வியா பாரிகளுக்குப் பண ஆசை பிடித்திருக்கிறது. போருக்காக எதை வேண்டுமானலும் செய்து பட்டமும் பாராட்டும் பெறுவதிலே சர்க்கார் உத்தி

யோகஸ்தர்கள் முனைந்திருக்கிறார்கள். விலை வாசிகள் ஏறுகின்றன; தேவையான பண்டங்கள் கிடைக்கவில்லை. ஏழை மக்கள் சோற்றுக்கு ஆலாய்ப் பறக்கிறார்கள். பணவீக்கம் சொல்லி முடியாது; எல்லாரும் வெள்ளி வண்டியில் ஏறக் கண்மண் தெரியாமல் ஓடுகிறார்கள். பணம் பண்ணினால் போதும்; அரிசியில் கல்லைக் கலந்து கொடுத்தால் பரவாயில்லை. இதுதான் பெரு விழா; இனி இத்தகைய சந்தர்ப்பம் வராது. ஆகையால் எவ்வளவு குவிக்க முடியுமோ இன்றே குவித்துக்கொள், அப்பனே!

பணம் சம்பாதிப்பதற்குப் பர்மிட், புகழ்ச்சி, லஞ்சம், யுத்தத்துக்கு நன்கொடை ஆகியவை தேவை; எனவே இவையெல்லாம் எங்கும் உருக் கொண்டன. போர்வீரர்களுக்குத் தேநீர் கொடுப் பதற்காக, உயர்குலத்துப் பெண்கள் அந்தப் புரத்தை விட்டு வந்து, கான்டீன்களில் உட்காரத் தலைப்பட்டார்கள். போர்வீரர்களுக்காக ஆடை நெய்ய வேண்டும்; காயத்துக்குக் கட்டுக் கட்ட, மருந்துத் துணிப் பட்டைகள் வேண்டும்; படிக்கப் புத்தகங்களும். பொழுது போக்குக்குச் சினிமாவும் கூத்தும் பாட்டும் வேண்டும். போர்க் களத்துக்குப் போகிறவன்தான் இன்று தெய்வம்; அவனை வழிபடு. வெளிநாட்டு ஸோல்ஜர்கள் பாரத நாட்டுப் பெண்களைச் சீண்டினால், அதைப் பொறுத்துக்கொள். எத்தகைய அவமானமாக இருந்தாலும் 'ஈ ஈ' என்று பல்லைக் காட்டிப் பொறுத்

துக்கொள். என்ன நடந்தாலும் சரி, ஒரு பேச்சு எழாது; பாரத நாட்டினுடைய இரத்தம் கொதிக்காது. அதுதான் பனிக்கட்டி போலக் குளிர்ந்து உறைந்திருக்கிறதே!

இந்த நிலையில் காந்தி சொன்னார்— "நாடு மயானமாகிவிட்டது. மனிதர்கள் மனிதர்களாக இல்லை; விலங்காகிவிட்டார்கள். இந்த நாட்டை இப்போது காக்கவில்லையென்றால் பிறகு அது எப்போதுமே உயிருடன் இராது." இவ்வளவு பரந்ததும் புராதனமானதும் கிழமுமான நாட்டை ஆண்மையற்றதாக, வலுவற்றதாகச் செய்த பாவம் யாருடைய தலையில் சுமந்திருந்ததோ அத் தகைய வெளிநாட்டு ஆட்சியாளர்களைப் பார்த்து, "இந்தியாவை விட்டுப் போ" என்றார் காந்தி.

முதலில் அவர்கள், "காந்தி ஒரு பைத்தியம்; அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஜப்பானியப் படைகள் இந்தியாவின் எல்லையில் நிற்கின்றன; இந்த ஆசாமியோ, தன்னைக் காப்பவர்களையே 'போய்விடு' என்கிறான். இவன் நேரிடையாகத் தீயில் குதித்துத் தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறானே? முடியாது, நாங்கள் அப்படி நடக்க விடமாட்டோம். பாரதத்தை நாங்கள் காப்பாற்ற வேண்டும்; நாங்கள் பாரத நாட்டைக் காத்தே தீருவோம்" என்றார்கள்.

"எதற்காக இந்த நாட்டைக் காக்க விரும்புகிறீர்கள்? உங்கள் சொந்த நலனுக்காகவா?" என்று மகாத்மா கேட்டார்.

"நாங்கள் உங்களை ஜப்பானியரின் பிடியிலிருந்து காப்பாற்ற விரும்புகிறோம். அவர்களுடைய ஆட்சியில், உங்களைக் குண்டு போட்டுச் சுட்டுவிடுவார்கள். அவர்கள் காட்டுமிராண்டிகள்; உங்களுக்குக் கடுமையான எதிரிகள்" என்று ஆங்கிலேயர் சொன்னார்கள்.

"நீங்கள் இருப்பதனால்தான் அவர்கள் எதிரிகளாக இருக்கிறார்கள். பொதுவாக எங்களுக்கு எதிரி யாருமில்லை; ஏனெனில் நாங்கள் யாருக்கும் ஒரு தீங்கும் செய்ததில்லை. உங்களுடைய எதிரிகள்தாம் எங்களிடமும் பகைமை பாராட்டுகிறார்கள். நீங்கள் போனபிறகு எங்களுக்கு எதிரி எவனும் இருக்கமாட்டான். அப்படி எவனாவது இருந்தால் அவனை நாங்கள் சமாளித்துக்கொள்கிறோம். இதைப் பற்றி உங்களுக்கு என்ன?" என்று விடையிறுத்தார் காந்தி.

இதற்கு வெளிநாட்டு ஆட்சியாளர்கள் சொன்னார்கள்—"இவர்கள் எதிரிகளோடு கலந்து கொள்ளச் சதியாலோசனை செய்கிறார்கள். நம் முதுகில் கத்தியைப் பாய்ச்ச விரும்புகிறார்கள். எங்களுக்கு இவ்வளவு பயங்கர ஆபத்து இருக்கும் சமயத்திலே, 'நீ போய்விடு; பாரத நாட்டை விட்டுவிடு' என்கிறார்கள். பாரத நாட்டை விட்டு விட்டால் நாங்கள் எந்தத் துணையைக் கொண்டு ஜர்மனியோடு போரிடுவது? இவர்கள் சொல்வதற்கு என்ன அர்த்தம்? எங்கள் நகரங்களை ஜர்மன் குண்டு தகர்க்கட்டும், எங்கள் பெண்டுகள்

விதவைகளாட்டும், எங்கள் நாட்டு இளமை போர்த் துப்பாக்கிகளுக்கும் பிரங்கிகளுக்கும் இரை யாகட்டும், அதைப்பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை என்பதுதானே அர்த்தம்? இது மோசம், நம்பிக்கைத் துரோகம். இதற்காக இவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். கொடுங்கோல் ஆட்சியைத்தான் இவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.''

"புரட்சியாளரிடம் எவ்வகை ஈவிரக்கமும் கொள்ளாதே. தேவைப்பட்டால் அவர்களைக் குண்டினால் சுட்டுப் பொசுக்கிவிடு. அதைச் செய்தாலன்றி அவர்களுக்குப் புத்தி வராது'' என்று கட்டளையிட்டார் சர்ச்சில் துரை.

இந்தப்புறம் காந்தியடிகளின் எழுத்தும் பேச்சும் தீயைக் கக்கின. அவருக்குள் இருந்த எரிமலை தகதகவென்று நெருப்புக் குழம்பை ஊற் றியது. அது வெடிக்க விரும்பியது.

அபயன் அவருடைய கட்டுரைகளைப் படித் தும், அவரைப் பின்பற்றும் தலைவர்களின் பிரசங் கங்களைக் கேட்டும் வீராவேசம் கொண்டான்; "விஜயா, இதோ பார், நாட்டில் புரட்சி நடக்கப் போகிறது. சரித்திரம் பிறக்கப் போகிறது. தயாராக இரு. பெருமனிதனுக்கு நடக்கும் உயிர் வழிபாட்டிலே நாம் அர்க்கியங்கூடச் செலுத்த முடியாத துரதிருஷ்டர்கள் ஆகிவிடக் கூடாது. நடக்கட்டும்; ஒரு தடவை பிரளயமே வரட்டும். பிழைப்பிலும் சாவிலும் என்ன இருக்கிறது? ஒரு

கணப் பொழுதுதான் என்றாலும், தீப்பொறி போலப் பளிச்சிட்டு ஒளிர்ந்து, பிறகு எப்போதைக்கும் இருண்டுவிட்டாலும் நல்லது தானே?" என்றான்.

"என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் விஜயா.

"காந்தி என்ன சொல்கிறாரோ அதைத்தான் செய்வேன். அவருக்குத்தான் நாட்டின் ஜீவ நாடி தெரியும்; வேறு எவருக்கும் அது தெரியாது. அவர் சொல்வது நாம் கடைத்தேறும் வழியாக இருக்கும். அதனால் நெருப்பில் குதிக்க வேண்டியிருந்தாலும் எனக்குத் தடை இல்லை."

அன்றைக்கே அவன் காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதினான்—

"பாரத நாட்டின் பாக்கியத்தை விதிப்பவரே, இன்று உங்கள் மூச்சில் இந்நாட்டு நாற்பது கோடி மக்களின் மூச்சு உயிர்த்துக்கொண்டிருக்கிறது. உங்கள் உள்ளத்தின் ஒலியே இந்த நாட்டு மக்களுடைய இதய ஒலி. இராமனும் கண்ணபிரானும் உலவிய இந்த நாட்டில், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வேறு எது தெரியுமோ தெரியாதோ, இந்த நாட்டின் ஆன்மாவை மட்டும் நன்றாக அறிவீர்கள். நீங்கள் உத்தரவிடுங்கள்—என்னைப் போன்ற ஆயிரமாயிரம் இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள். நான் தயாராக இருக்கிறேன்."

மகாத்மாவின் பதில் உடனே வந்தது—"சரி, பொறுத்துக்கொள். விரைவில் தருணம் வரப் போகிறது. இனி அதிக நாள் காத்திருக்க வேண்டியதில்லை."

இந்தக் கடிதம் கைக்குக் கிடைத்ததும் அவன் பைத்தியம் போலக் கூச்சலிட்டான்—"அடி விஜயா, இதோ பார். காந்திஜி தாமே தம் கையால் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அடி பைத்தியமே, உன் அபயன் எவ்வளவு பாக்கியசாலி என்பதைத் தெரிந்துகொள்! இந்தக் கடிதத்தை மிகவும் நன்றுகப் பாதுகாத்து வை; உயிரைவிட அதிகக் கவனத்துடன் பாதுகாத்து வை. இது நமக்கு மிகப் பெரிய ஆஸ்தி!"

கடிதத்தைத் தாய்க்குக் காண்பித்ததும் அவள், "இப்படிக் கொடு மகனே, இதை நான் என் பூஜைப் புத்தகத்தில் வைத்துக்கொள்கிறேன்" என்றாள்.

5

வர்தாவில் ஜூலை 14-ஆம் தேதியன்று காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. 'இந்தியாவை விட்டுப்போ' என்ற தீர்மானம் அங்கு நிறைவேறியது.

அபயன் வர்தாவுக்குப் போயிருந்தான். பஜாஜ்வாடியில் காரியக் கமிட்டியின் கூட்டங்கள்

நடந்த இடத்திலே அவன் வளைய வந்துகொண்டிருந்தான். கூட்டத்துக்கு வருகிறவர்களும் போகிறவர்களுமாக இருந்த தலைவர்களைத் தொலைவிலிருந்து தரிசித்தான். அவர்கள் இந்த நாட்டின் விடுதலைக்காக அனைத்தையும் துறந்தவர்கள்; உடலில் உயிருள்ள வரையில் அந்தத் தெய்வீக வழியிலிருந்து வழுவாதவர்கள்; வெள்ளாடை யணிந்து, தவத்தினால், தூய புரட்சியொளியினால் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள். அவர்களை அவன் தன் உள்ளத்துள் வணங்கினான்.

கடைசிக் கூட்டம் முடிந்ததும் அபயன் பார்த்தான்—ஸர்தார் வல்லபபாய் பட்டேல், சங்கர் ராவ் தேவுடன் வீராவேசத்தோடு வெளிவந்தார். வெளியே அவருடைய நெருங்கிய சீடர்கள் நின்று கொண்டிருந்தனர்.

"என்ன ஆயிற்று?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"அவ்வளவுதான்; இனிப் பொறுக்க முடியாது."

"என்ன செய்ய வேண்டும்?"

"எல்லாந்தான்!" — இடிபோன்ற அவருடைய கடுங்குரலைக் கேட்டதும், 'இந்த மகாபுருஷரின் இரும்பு வீரம் என் நாட்டில் பரவுமா?" என்று தோன்றிற்று அபயனுக்கு.

6

வர்தாவுக்குப் பிறகு பம்பாய். 7-ந் தேதி ஆகஸ்டு, 1942. 'கோவாலியா டாங்க்' என்னும் இடத்தில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. வர்தாத் தீர்மானத்துக்கு முத்திரையிடும் பணி இங்கு நடக்க வேண்டும்.

மக்களிடையே அற்புதக் கிளர்ச்சி. ஆழ்ந்த அமைதியான சூழ்நிலை; ஆனால் தனிப்பட்ட உல்லாசமும் நிலவியது. உள்ளத்தில் அச்சம்; ஆவலும் இருந்தது. பனிபோல் தண்ணென்றிருந்த இரத்தத்தில் இப்போது சிறிது சூடு உறைப்பதாகத் தோன்றியது. தூங்கிக் கொண்டிருந்த இந்த நாட்டுத் தேசிய மகாபுருஷன், ஆழ்ந்த துயிலிலிருந்து கொட்டாவி விட்டவண்ணம் விழித்தெழுகிறான். அவன் ஏதோ செய்ய விரும்புகிறான்; செய்யாமல் இருக்கப் போவதில்லை.

நாளைக்கு என்ன நடக்கும் என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், கட்டாயம் ஏதோ நடக்கப் போகிறது என்பதை மட்டும் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். பரவாயில்லை, ஏதாவது ஒன்று நடக்கட்டும்! இந்த மயான அமைதி, அசையாத இந்த ஜடத்தன்மை, இடுகாட்டுக் கல்போன்ற இந்தத் தன்மை, பேடியான இந்தச் செயலற்ற தன்மை—இது அழிந்தால்

போதும். எல்லாமுமே அழிவதற்கு முந்திய துடி துடிப்பாக இது இருந்தாலும் சரி; விளக்கொளியில் பாயும் விட்டிலின் தாவலாக இருந்தாலும் சரி; எப்படியும் இதுதான் கதி, வாழ்க்கை, உயிர்ச் சக்தி; இது சாவு; ஆயினும் வாழ்வுக்கு அமரத் தன்மை தரும் பேரியக்கம் கொண்ட செயல். எத்தகைய அழகிய திருவிழா இது! உண்மை யாகவே நம் கண்ணெதிரில் சரித்திரம் உருவாகப் போகிறதோ?

அபயனும் பம்பாய்க்குப் போயிருக்கிறான். அவன் காங்கிரஸ் பிரதிநிதியல்ல; ஆயினும் காங்கிரஸ் நடவடிக்கைகளைக் காணும் ஆவ லோடு சென்றிருக்கிறான்.

அவன் வீட்டிலிருந்து புறப்பட்டபொழுது, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள் விஜயா.

"அங்கேதான்; புரட்சிப் பொறி கிளம்பும் இடத்துக்கு."

"அங்கே என்ன நடக்கும், அபயரே?"

"சொல்ல முடியாது. ஆனால் இன்றுள்ள சோர்வுக்கு, செயலின்மைக்கு முடிவு ஏற்படும்."

"ஆனால் உங்கள் 'தீஸிஸ்' என்ன ஆகும், அபயரே?"

"இனி அந்தத் 'தீஸிஸி'ல் எனக்கு நாட்ட மில்லை, விஜயா. இப்போது என் நரம்புகளில் புதுத் துடிப்பை, புதிய அசைவை நான் உணரு

கிறேன். இனி என் வாழ்வின் புதிய 'தீஸிஸை'த் தான் நான் எழுத விரும்புகிறேன்.''

''எப்போது திரும்புவீர்கள்?''

''யாருக்குத் தெரியும், விஜயா? திரும்பி வந்தால் கட்டாயம் சந்திப்பேன். திரும்பி வராவிட்டால்—''

''வராவிட்டால்?'' — திடீரென்று அச்சத்துடன் விஜயா கேட்டாள். அவள் குரல் நடுங்கியது. மூச்சு அடைப்பதுபோல இருந்தது அவளுக்கு.

''எரிமலை வெடிக்கும் நிலையில், எவன் வருவான், எவன் போவான் என்று யார் சொல்ல முடியும், விஜயா? இன்று இல்லாவிட்டால் நாளைக்குத் தீயில் எரிந்துதானே பஞ்சபூதங்களோடு கலக்கவேண்டும்!''

''இப்படி அமங்கலமாகப் பேசாதீர்கள், அபயரே! என் மனம் அஞ்சுகிறது.''

''அடி பைத்தியமே, இதில் அஞ்சுவதற்கு என்ன இருக்கிறது? இது விழா; பெருவிழா! சிவபெருமானின் தாண்டவம் நடக்கப் போகிறது. உடுக்கையின் ஒலி கேட்கிறது. புவி முழுவதும் அசைந்தாட ஆயத்தமாக இருக்கிறது. இது ஆனந்தத்துக்குரிய, பேரானந்தத்துக்குரிய கணம். வா, கூத்தாடு; இந்த ருத்திர பைரவரின் ஆடலுடன் சமரசமாகிவிடு.''

அபயன் வெகு நேரம் வரையில் நின்றபடியே என்ன என்னவோ பேசிக்கொண்டிருந்தான்.

'இவன் பழைய சாந்தமான அபயனல்ல; இவனிடம் அறவே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது' என்பது விஜயாவுக்குத் தெரியும். உடலிலே அல்ல; சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மாறுதல். இப்பொழுது இவன் தனி ஆளல்ல; அறிய இயலாத, நெருங்க இயலாத, அடைய இயலாத சக்திக்கு அடையாளமாக இருப்பவன். இவன் தானே தன் விருப்பப்படி செயலாற்றுவதில்லை. இவன் பின்னல் ஒரு தூண்டுதல், ஓர் ஆற்றல் இருக்கிறது; அது இவனைக் கொண்டு செயல் புரிவிக்கிறது. இவனைத் தடுக்க முடியுமா? கங்கை வெள்ளத்துக்கு அணைபோட முடியுமா? இமய மலையின் பனிப்பாறைகளைத் தடுக்க முடியுமா?

பாக்கியமுள்ளவர்களின் வாழ்வில் இத்தகைய நற்பொழுது வருகிறது. அந்தக் கணத்தில் அவர்களிடம் தெய்விக ஒளி வீசுகிறது. இவ்வுலகத்துக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தி அவர்களைத் தொட்டு, அவர்களின் வாழ்வில் ஒப்பற்ற தெய்வத் தன்மையையும் நிலையான ஆனந்தத்தையும் நிறைத்துவிடுகிறது. புத்த பகவான் போதி மரத்தினடியில் ஒளி பெற்றபோதும், இராமகிருஷ்ணர் பரமஹம்ச நிலையை எய்தியபோதும் இதுதான் நடந்திருக்க வேண்டும். பரமனின் அருளால் இத்தகைய நற்பொழுது வருகையில், மனிதன் ஆனந்தபரவசனாகிக் குரல் தழுதழுக்க, "நான் அடைந்துவிட்டேன்! எனக்குக் கிடைத்துவிட்டது! இனி நான் பெற வேண்டியது ஏதுமில்லை!"

என்று கூவுகிறான். உலகின் கட்டுகளிலிருந்து மனிதனை விடுவிக்கும் இந்த ஆனந்தமென்னும் தூய சமாதிநிலையில், சாட்சாத் சச்சிதானந்தத்தின் தரிசனமே கிடைத்தாலும் வியப்பில்லை.

அபயன் இத்தகைய நிலையில் இருப்பதாகவே விஜயாவுக்குத் தோன்றியது. ஆயிரமாயிரம் ஆண்டுகளின் பண்பாடும் பரம்பரையும் நாகரிகமும் வளமுற்றுப் பழமையான சரித்திரமுடைய இந்த நாட்டுக்கு, இன்று உயிரோடுள்ள ஒரே அடையாளமாக விளங்குகிறவர் காந்திதான் என்பது அபயனுடைய கொள்கை.

எப்படிப்பட்ட நாடு இது? இமயமலையின் அழகிய வெள்ளிக் கொடி எந்தக் காலத்திலிருந்து வான வீதியில் வீசுகிறதோ, யார் அறிய முடியும்? புவியிலே முதல் வைகறையின் ஒளிக் கிரணங்கள் பரவிய நாடு இது. இந்த நாட்டின் தபோவனங்களில் வேதங்களும் உபநிடதங்களுமாகிய மந்திரகீதம் ஒலித்தது. கங்கையும் யமுனையும், மனிதனுடைய கருணையே உருகிப் பெருகியதற்கு அடையாளமாக இன்றும் பாய்கின்றன. இந்த நாடு எப்போதுமே மனிதத் தன்மைக்கு மதிப்புக் கொடுத்திருக்கிறது; வேறு எந்தச் சக்தியையும் இது வழிபட்டதில்லை. காரணமின்றி இரத்த வெறி கொண்டு போரிடுவதையோ, சாம்ராஜ்யப் பேராசையையோ இது கற்பிக்கவில்லை; பகைமைக்கும் ஹிம்சைக்கும் பெருமை தந்ததில்லை. ஜடமான பௌதிக உலகத்தின் மதிப்புக்களைவிட, ஆன்மிகமும் தெய்விக

முமான பொருள்களின் மதிப்புக்கள் உயர்ந்தவை என்ற கொள்கையை நிறுவிய நாடு இது. தெய்வத்துக்கும் மனிதனுக்குமிடையே எப்போதும் வேற்றுமையைக் குறைத்துப் பாலமிட்ட நாடு இது. இந்த நாட்டுக்கு அடையாளமாக இன்று விளங்குகிறவர் காந்தியடிகள்.

இன்று காந்தியின் நரம்பில் வியாசர், வால்மீகி, கபீர், துளசிதாசர், நானக், துகாரம், மீராபாய், லட்சுமிபாய் ஆகியவர்களின் இரத்தம் ஓடுகிறது. பாரத நாட்டுக்கு இன்று ஒரே சத்தியம் அவர்; ஒரே ஒளி அவர். அவரிடந்தான் நம்முடைய ஆவல்களும் கனவுகளும் இடங் கொண்டிருக்கின்றன. அவரை விட்டால் வேறு எதுவுமே இல்லை. அவர் என்ன செய்கிறாரோ அதுதான் நடக்கும். புவியே பிளந்தாலும், வானமே இடிந்தாலும், அவர் செய்யாதது ஒருபோதும் நடக்காது. இதைப் பற்றி அபயனுக்கு எவ்வகை ஐயமும் இல்லை; சங்கடமும் இல்லை. அவனுக்கு இருப்பது ஒரே வழி; ஒரே இலட்சியம்: காந்தியின் பின்னால் செல்வது; அவர் சொல்வதைச் செய்வது. ஆமாம், அவர் நெருப்பில் குதிக்கச் சொன்னால், குதிக்க வேண்டும்; சிறிதும் தடை சொல்லாமல்! ஏனெனில் இப்படிக் குதிப்பதுதான் வாழ்க்கை; அதற்குப் புறம்பே இருப்பது சாவு.

விஜயாவினால் அபயனைத் தடுக்க முடியாது; அவள் தடுக்க விரும்பவுமில்லை. அவனுடைய இந்த வீர ஒளி — வாழ்வுடன் விளையாடும் பான்மை — அவளது உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்

கிறது. அபயனைப் பற்றி அவளுக்குப் பெருமை, பெருமிதம். அவனை அடைந்து அவள் மனம் பூரிக்கிறது. இத்தகைய பேராண்மை வாய்ந்த ரத்தினம் தன்னுடையது, இந்தப் பாக்கியம் தனக்கே உரியது என்று எண்ணும்போது, அவள் தன்னைக் குறையற்றவளாக உணருகிறாள். 'பெண் என்பவள் பந்தனத்துக்கு அடையாளமல்ல; விடுதலைக்கு அடையாளம்; பலவீனத்துக்கு அடையாளமல்ல; சக்திக்கு அடையாளம்' என்பது அவள் கொள்கை. எனவே, அபயனுடைய வழிக்கு அவள் எப்படித் தடையாக இருப்பாள்?

ஆம், ஒரே ஒரு கவலை அவள் மனத்தை அழுத்தியது. கூடவே ஓர் ஒப்பற்ற இனிமையும் அவள் வாழ்வில் நிரம்பியிருந்தது. இன்றைக்கு மூன்று மாதமாகிறது; ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும், தன் வயிற்றில் ஒரு புது உயிர் இருப்பதை அவள் மேல்மேலும் நன்றாக அறிந்து வருகிறாள். அந்த அறிவில் அவள் தன் உள்ளத்தில் அற்புதமான அசைவு ஒன்றை, நிலையான புல்லரிப்பு ஒன்றை உணருகிறாள். தெய்விக இன்னிசையும், வானவில்லின் அழகிய நிறங்களும் வாழ்வை வனப்புறச் செய்வதாக அவளுக்குத் தோன்றுகிறது.

தாய்மை மகிழ்ச்சியில், விண்ணுலகமே தன் கைக்கு வந்துவிட்டதாக அவள் களிக்கிறாள். ஆனால் புதிய உயிரைக் காக்கும் பொறுப்பை எண்ணியதுமே, கவலை முகில்கள் அவள் நெஞ்சைச் சூழ்ந்துகொள்கின்றன. சாதாரண நிலைமையாக

இருந்தால் அவளுக்குக் கவலை ஏதுமில்லை. அபயனுக்கு ஆராய்ச்சிப் பயிற்சிக்கான உபகாரச் சம்பளம் கிடைத்து வந்தது; இரண்டொரு நல்ல டியூஷன்களும் இருந்தன. அவன் தாயும், ஆயிரம் தடுத்தும் கேட்காமல், அக்கம்பக்கத்தில் வேலை செய்து ஏதோ சம்பாதித்து வந்தாள். வறுமை வாழ்வுதான் என்றாலும், கஷ்டம் ஏதுமில்லை. வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் கிடைத்து வந்தன. ஆனால் பெரும்பாலும் எங்கும் குறைவாகத் தென்படும் ஒரு பொருள் அவர்களிடம் இருந்தது; அதனால் அந்தச் சிறு குடும்பத்தார், உலகிலேயே தாம் சுகமாக வாழ்கிறவர்கள் என்று எண்ணினர்கள்: அந்த மூவருக்கிடையே நிர்மலமான, ஆழ்ந்த அன்பு இருந்தது. அவர்களின் வீட்டில் பரிவு ஓயாமல் பொழிவது போலத் தோற்றியது. மூவரில் ஒவ்வொருவருக்கும், தன் சுகத்தைக் குறைத்து, மற்றவர்களுக்கு மகிழ்ச்சியும் வசதியும் அளிப்பதே நோக்கமாக இருந்தது.

அபயனின் அம்மா தழுதழுத்த குரலில், "சொர்க்கம், மேலே ஆகாயத்தில் இல்லை; அது சாவுக்குப் பின்பு கிடைப்பதுவுமல்ல. சொர்க்கம் என்று ஏதாவது இருந்தால் அது இங்கே, இந்த உலகில், எனது இந்தச் சிறு குடிசையில் இருக்கிறது. என் விஜயா சாட்சாத் மகாலட்சுமி. அவள் வந்ததிலிருந்து என் வீடு நிறைந்திருக்கிறது. போதும், இனி எனக்கு ஏதும் தேவையில்லை. ஆண்டவனே, உன்னிடம் கேட்பதற்கு இனி

ஒன்றுமில்லை. என் அபயனையும் விஜயாவையும் சுகமாக வாழும்படி காத்தருள வேண்டும். நான் அபயனுடைய தோளில் ஏறியே இறுதி யாத்திரை செய்ய வேண்டும். இவ்வளவுதான் என் ஆசை'' என்று சொல்வாள்.

இத்தகைய தாய்க்கு மகனைப் பிறந்தது எவ் வளவு பெரிய பாக்கியம் என்று அபயன் எண்ணு வான். அவளுக்குத்தான் எவ்வளவு துணிச்சல், எவ்வளவு பொறுமை, எவ்வளவு விவேகம்! அவனுக்கு இரண்டு வயதாக இருக்கையில், பிளேக்கில் தகப்பனார் காலமானார். அப்போ திருந்து இன்றுவரையில் அம்மாதான் அவனை எவ் வளவோ கஷ்டப்பட்டு வளர்த்துப் பெரியவனாக்கி யிருக்கிறாள்!

அவனுடைய தந்தை, நடுத்தரப் பள்ளியொன் றின் வாத்தியாராக இருந்தார். அவர் ஆஸ்தியாக முந்நூறு ரூபாய்ப் பணம்தான் வைத்துப்போனார். அது தபால் ஆபீசில் இருந்தது. ஆனால் அவர் அபயனுக்கும் அவர் தாய்க்கும் விட்டுச் சென்ற பெரிய ஆஸ்தி, ஆன்ம பலமும் நல்லொழுக்கமுமே. அவர்கள் இருவரும் வாழ்வின் கடுமையான போராட்டத்தில் நிலைநிற்க உதவியது இந்த ஆஸ்தி தான். வறுமை, ஓயாத உழைப்பு, அவமானம் ஆகிய எல்லாவற்றையும் அவன் தாய் பொறுத் தாள். அவமானமிழைத்தவர்களுக்கும் அவளது உள்ளத்தில் அன்புதான் சுரந்தது.

கசப்பான எந்தத் தீவிர அநுபவத்தையும், "ஊம், இப்படி நடப்பது சகஜம்" என்று சொல்லி, அந்தத் தாய் ஜீரணம் செய்துகொள்வாள். உபவாசம் இருப்பது அவளுக்குப் பழக்கம். மழைக் காலமான சாதுர்மாசத்தில் தினம் ஒரே தடவை தான் உண்பாள். ஆனல் அபயனுக்குப் பால் வாங்குவதற்கோ, குளிரிலிருந்து காக்கத் துணி வாங்குவதற்கோ அவளுடைய சாதுர்மாசம் பன்னிரண்டு மாதங்களாக நீண்டுவிடும். இது தவிர, ஏகாதசி, சோமவாரம், சிவராத்திரி எல்லாம் உபவாசந்தான். இந்த ஒழுங்கு இடைவிடாமல் நடந்து வந்தது. ஒரு நாளைக்கல்ல, ஒரு மாதத்துக்கல்ல, ஓர் ஆண்டுக்கல்ல—ஆண்டின் பின்னல் ஆண்டாக, அவளுடைய வாழ்வின் நிலையான ஒழுங்காக இது அமைந்துவிட்டது.

இதன் பயனக, அவள் முகத்தில் சுருக்கங்கள் படிந்தன; நாற்பத்தைந்தாவது வயதிலேயே தலை முழுவதும் நரைத்தது. ஆனல் அவள் எப்பொழுதும் யாரிடமும் குறை கூறியதில்லை. மனத்தில் அதிருப்தி இல்லை; உள்ளத்தில் வருத்தம் இல்லை. அற்புதமான ஆன்ம அமைதி அவளது முகத்தில் நிலையாகக் குடிகொண்டிருந்தது. கண்ணிலும் சாத்துவிகமான ஒளி வீசியது. அவள் எப்போதாவது புன்னகை பூத்தால், தூய்மையே ஒரு வடிவங் கொண்டு அந்தப் புன்னகை வாயிலாக வெளிவருவதுபோலத் தோற்றும்.

எந்த ஆபத்திலும், எந்தச் சங்கடத்திலும், அவள் கலங்கியதை யாரும் கண்டதில்லை. கணவர் இறந்தபோது, சவத்துடன் தானும் மயானத்துக்குப் போக வேண்டுமென்று அவள் பிடிவாதம் பிடித்தாள்.

"பெண்கள் எங்காவது மயானத்துக்குப் போவதுண்டா?" என்று மக்கள் அவளைத் தேற்றினர்கள்.

"நான் உங்கள் பின்னாலேயே வருகிறேன், அண்ணன் தம்பிகளே! அவருடைய உத்தரக் கிரியை சரியாக நடக்கிறதா என்பதை என் கண்ணால் பார்க்க வேண்டும். அப்போதுதான் எனக்கு அமைதியாக இருக்கும்" என்றாள் அவள்.

மடியில் தூங்கிக்கொண்டிருந்த இரண்டு வயதுக் குழந்தையான அபயனை எடுத்துக்கொண்டு, அவள் அவர்களோடு சென்றாள். எரியும் சிதையில் அவள் குதித்துவிடுவாளோ என்று ஊரார் பயந்தார்கள். அவர்கள் நான்கு பேரைக் காவலுக்கு வைத்து, அவளைச் சிதைக்கு இப்பால் இருபது கஜ தூரத்துக்குள் வரவிடாமல் தடுத்தார்கள்.

"உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா, தம்பிகளே? அபயனை இந்த உலகில் தனியாக விட்டு நான் போவேனா? நான் அப்படிப் பயங்கொள்ளியல்ல" என்று அவள் சொன்னாள்.

சிதை எரிந்தபொழுது அவள் தொலைவில் அரச மரத்தடியில் காலை மடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். சிறிதும் அசையவுமில்லை; நகரவு

மில்லை. வெறித்த கண்ணுல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தாள். அருகில் தரையிலே, கிழிசல் துணிப் போர்வையில், அபயன் தூங்கிக்கொண்டிருந்தான்—ஒன்றும் அறியாதவனுய்! தன் உலகம் தலைகீழாக மாறிவிட்டதைக் குழந்தை உணரவே இல்லை!

அப்போதிலிருந்து இன்று வரையில் அந்தத் தாய், அபயனைக் கண்ணுங் கருத்துமாகக் காத்து வருகிருள். அவனை அவள் படிக்க வைத்தாள். அவள் படித்தது மூன்ருவது வகுப்பு வரையில் தான்; ஆனுல் கணவர் வாத்தியாராக இருந்ததால், இராமாயணம், கீதை முதலிய சமய நூல்களைப் படிக்குமளவு தகுதியை அவளுக்கு உண்டாக்கி விட்டார். அவளுடைய பெரும்பாலான பொழுது ஆண்டவன் நினைவிலேயே சென்றது. தாயன்பு, தாய்நாட்டுப் பற்று, பண்பாடு சமயம் சரித்திரம் ஆகியவற்றினிடம் அன்பு, நல்லொழுக்கத்தினுல் வரும் தூய வல்லமை — இவையெல்லாம் அபயனுக்குத் தாயின் வாசகத்திலிருந்தே கிடைத்தன. தாய் அவனுக்குச் சாட்சாத் சக்திதேவியின் வடிவம். இறைவனின் திருவருளும் வரமும், இரக்கமும் அமைதியும், மகிழ்ச்சியும் மங்கலமும் ஒன்ருகத் திரண்டு உருவெடுத்தாற்போல அவன் கண்ணுக்குக் காட்சியளித்தாள் தாய்.

அவன் தாய், காந்தியடிகளை எப்பொழுதோ ஒரே ஒரு தடவைதான் பார்த்திருந்தாள்; ஆயினும் அவள் தனக்குள், 'இவர் இராமன், கிருஷ்

ணன் ஆகியவர்களின் அவதாரம். "யுகந்தோறும் தோன்றுவேன்" என்று இறைவன் கூறியதற் கேற்ப, இவர் பாரத நாட்டில் பிறந்திருக்கிறார்' என்று தெளிவாகத் தீர்மானித்துவிட்டாள்.

அவள் அபயனிடம், "இதோ பார், மகனே! காந்தி அவதார புருஷர். அவருடைய யுகத்தில் வாழப்பெற்ற நாம் மிகவும் பாக்கியசாலிகள். இந்த நாட்டை அவர்தாம் கடைத்தேற்றப் போகிறார் என்பதை மட்டும் கவனத்தில் வைத்துக்கொள். அவருக்கு உன்னால் தொண்டு செய்ய முடிந்தால், சாட்சாத் பகவானுக்கே பணி செய்ததாக எண்ணிக்கொள்" என்று சொன்னாள்.

அவள் காந்தியடிகளின் உபதேசப்படி, தினமும் இராட்டையில் தவறாமல் நூல் நூற்று வந்தாள். அதிலிருந்து அவளுக்கு வேண்டிய துணியும் அபயனுக்குச் சட்டையும் வேட்டியும் போதுமான அளவு கிடைத்தன. அவள் கீதையை ஒழுங்காகப் பாராயணம் செய்வாள்; 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பஜனையை இனிமையாகப் பாடுவாள்.

இவை யாவும் மனத்தில் நல்ல விளைவை உண்டாக்கின. அவன் திடமான காந்தி பக்தனானான். சேவாக்கிராமம் அருகில் இருந்ததனால், வருடத்தில் இரண்டொரு முறை, புண்ணிய க்ஷேத்திர யாத்திரை போல, அங்கே போய்வருவான். கல்லூரிப் பிரசங்கங்களிலும், விவாத அரங்குகளிலும், கட்டுரைகளிலும் அவன் காந்தியடிகளின் அஹிம்சை நோக்கத்தையே விளக்குவான்.

'ஹரிஜன்' பத்திரிகையைத் தவறாது படித்த துடன், காந்தியின் கட்டுரைகளில் ஒவ்வொரு சொல்லிலும் கவனம் செலுத்துவான். பல்கலைக் கழக நூல்நிலையத்தில், காந்தியைப் பற்றி ஆங்கி லேயர், அமெரிக்கர், பிரெஞ்சுக்காரர் முதலிய வெளி நாட்டு ஆசிரியர்கள் எழுதிய நூல்கள் அனைத்தை யும் அவன் படித்திருந்தான். அவனுடைய ஒவ் வொரு நரம்பிலும் காந்தியின் சிந்தனைப்போக்கு ஊறிவிட்டதோ என்று தோன்றும்படி, அவன் காந்தீயத்தில் ஆழ்ந்தான்.

ஆனால், காந்தியடிகளைச் சந்திக்கவோ அவரி டம் எதையேனும் கேட்கவோ அவன் எப்போ துமே விரும்பியதில்லை. "அடிகளின் பொழுதை வீணாக்குவதில் என்ன பயன்? எனக்கு எதிலும் சந்தேகமில்லை; புரியாததுமில்லை. அவருடைய பேச்சிலோ எழுத்திலோ, என் உள்ளத்தில் பதியாத சொல் ஒன்றுகூட இல்லை. இந்த நிலையில் நான் ஏன் அவரிடம் போய்ச் சிரமப்படுத்த வேண்டும்? வீண் சந்தேகம் கொண்டவரும், காந்தியைத் தாங்கள் பார்த்ததாகப் பத்திரிகைகளில் தமது பெயர் வெளிவர வேண்டும் என்று விரும்புகிறவர்களுமே அவரிடம் போகட்டும்" என்று அவன் சொல்வான்.

அயல்நாட்டுச் சர்க்காரிடம் வேலை செய்யக் கூடாது என்று அவன் முடிவு கட்டியதில் வியப்பு ஏதுமில்லை. பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்வது; அரசாங்கச் சார்பற்ற ஏதாவது ஒரு கல்லூரியில், இயலுமானால், ஆசிரியப் பணியாற்று

வது; மீதிப் பொழுதை மக்கள் பணிக்குப் பயன் படுத்துவது என்று அவன் தீர்மானித்திருந்தான்.

7

1942-ஆம் ஆண்டில், அபயன் தனது ஆராய்ச் சியை முடிக்கும் தறுவாயில் — இறுதி ஆண்டில்— இருந்தான். அவனுக்கு உபகாரச் சம்பளத்துடன், மாஜிஸ்திரேட் செளத்ரி அவர்களின் வீட்டில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்வதில் நல்ல வரு மானமும் கிடைத்து வந்தது. பணமோ பணம் என்று தவிப்பவர்கள், அவன் குடும்பத்தில் யாருமே இல்லை. அவனுக்கும் அவன் தாய்க்குந்தான் அது சுபாவமாகிவிட்டது; அதில் ஆச்சரியமில்லை. ஆனால் இந்த விஜயா இருக்கிருளே, அவள் மிக அற்புதமான பெண்!

பணக்காரச் சிற்றப்பாவின் குடும்பத்தை விட்டு, இந்த வறுமையில் வாழ்க்கைப்பட்டும், அவள் தான் சுகமாகவும் மங்களமாகவும் வாழ்வதாகவே கருதுகிருள். பெரிய பெரிய அலங்கார மஞ்சங் களில், பஞ்சணைகளில் படுப்பது, மேஜையில் சுவையான உணவுகளை உண்பது, கிளப்புக்கும் சினிமாவுக்கும் போவது - இவையெல்லாம் அவள் வாழ்வில் பதியவே இல்லை. தண்ணீரில் தாமரை போல அவள் அந்தப் பணக்காரக் குடும்பத்தில் இருந்திருக்கிருள்.

தனக்கு எல்லாம் அபயனே என்பது அவள் கருத்து. அவனை அடைந்ததும், அவள் வேறு எதையுமே விரும்பவில்லை. மூன்று அறைகள் கொண்ட அந்தச் சிறு வீட்டை அவள் சொர்க்க மாக்கினாள். தரையில் படுத்து ஆனந்தமாகத் தூங்குவாள். சாப்பாட்டில் சில சமயம் பருப்பு இராது; சில சமயம் கறிகாய் இராது. பால் கிடைப் பது அருமை. எப்பொழுதாவது அசந்து மறந்து தான் நெய்யைக் காண முடியும்.

"விஜயா ராணி, உனக்கு இந்தக் கடுமையான வாழ்க்கை பழக்கமில்லை. மிகவும் கஷ்டமாக இருக்குமே!" என்று எத்தனையோ தடவை அபயன் வருத்தத்துடன் கூறுவான்.

"யார் சொன்னது? எனக்கு இங்கே என்ன குறை? அங்கே சிற்றப்பாவின் வீட்டில்தான் வாழ்க்கை செயற்கையாகத் தோன்றியது. சாப் பிடுவது, விளையாடுவது, தூங்குவது, வம்பளப்பது - இவைதவிர வேறு வேலை இல்லை. காட்டு மரங்கள் வளர்வது போன்ற வாழ்வு அது. ஒரு நோக்கம், ஓர் இலட்சியம், ஒரு கேள்வி - ஏதுமில்லை. உட்கார்ந்தபடியே உள்ளூற உளுத்துப் போவதாக எனக்குத் தோன்றியது. இங்கோ, வாழ்வில், உயிர் வெள்ளத்தில் நீந்துவதாக எனக்குத் தோன்று கிறது. எவ்வளவு அமைதி, எவ்வளவு அன்பு, எவ்வளவு சுகம், இங்கே எனக்குக் கிடைத்திருக் கின்றன! நல்லவரான அம்மா கிடைத்திருக்கிறார்; சிறுவயதில் இழந்த தாயை மீண்டும் பெற்றுற்

போல உணருகிறேன். நீங்கள்? உங்களைப் பெற்ற எந்தப் பெண்தான் தன்னைப் பாக்கியவதியாகக் கருதமாட்டாள்?'' என்பாள் விஜயா.

அபயன் தழுதழுத்த குரலில், ''விஜயா ராணி, நீ அன்புக் கண் கொண்டவள்; எப்போதும் நல்ல தையே பார்க்கிறாய். நாற்புறமும் நன்மையையே பரப்புகிறாய். நீ வந்து எங்கள் குடிசையில் ஆனந்த மென்னும் மங்கள விளக்கை ஏற்றி வைத்தாய்'' என்பான்.

அவர்கள் மூவரில் யார் அதிகப் பாக்கியசாலி என்பது பற்றிப் போட்டி எழும். அனைவரும் தமது மனத்தில் தாமே முதல்வர் என்று கூறிக்கொண்டு களிப்படைவார்கள். உண்மையில் எவ்வளவு சுக மாக வாழ்ந்தது அந்தக் குடும்பம்!

9-ஆகஸ்டு 1942 கிளர்ச்சிக்கு முன்பே, பாரத நாட்டுடன் சமாதானம் செய்துகொள்ள ஆங்கி லேயர் ஒரு தடவை முனைந்தார்கள். இந்தியத் தலைவர்களும் சமாதானத்தை விரும்பினர்கள். ஆதலால் கிரிப்ஸ் தூதுகோஷ்டி வந்தது. நிறையச் சந்திப்பும் நீண்ட பேச்சுவார்த்தைகளும் நடந்தன; தினமும் பத்திரிகைகளில் பத்தி பத்தி யாகச் செய்திகள் நிரம்பின. அந்த நாளில் இதைத் தவிர்த்து இந்தியாவில் வேறு விஷயமே இல்லை.

ஒரு நாள் மாலையில் அபயன் ரேடியோச் செய்தி யைக் கேட்டு வந்ததும் ''அம்மா, சமாதானமாகி விட்டது. காலம் மாறிவிட்டது'' என்றான்.

"எப்படி? இது எப்படி நடந்தது?" என்று அம்மா கேட்டாள்.

"எல்லாம் சுமுகமாகத் தீர்மானமாகியிருப்பதாக, டில்லியிலிருந்து செய்தி வந்திருக்கிறது. ஏதோ கையெழுத்திட வேண்டியதுதான் இப்போது பாக்கியாம்" என்று அபயன் உற்சாகத்தோடு கூறினான்; "நமது கோட்டை இனித் தொலைவில் இல்லை, அம்மா!"

"நீ சொல்வதனால் இதை நான் ஒப்புக்கொள்கிறேன், மகனே! ஆனால் இரத்தம் கொடுக்காமல், மதிப்புள்ள பொருள் எதுவும் கைக்கு வராது. இப்பொழுது நாடு எந்தக் கஷ்டங்களை அநுபவித்து விட்டது, உட்கார்ந்தபடியே சுயராஜ்யம் கிடைக்க? ஏழு கடல்களைக் கடந்து வெள்ளைக்காரர்கள் வந்தார்கள்; சுயராஜ்யம் கொடுத்துச் சென்றுர்கள் என்று எப்போதாவது நடந்தது உண்டா? எனக்கு என்னவோ நம்பிக்கை விழவில்லை."

அம்மாவுக்குச் சரி என்று தோன்றியதுதான், கடைசியில் நடந்தது. கிரிப்ஸ் பேச்சு முறிந்து போனதாகவும், தூதுகோஷ்டியினர் தமது நாட்டுக்குத் திரும்ப ஏற்பாடு செய்வதாகவும் மறுநாள் செய்தி வந்தது. காந்தியடிகள் மோனம் பூண்டு, சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

நாட்டிலும் ஒரு வகைக் கலவரம் நிலவியது. ஒரேயடியாக இனி அடக்குமுறை ஆரம்பமாகும் என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் தலைவர்கள், "சற்றுப் பொறுங்கள். நிலைமையைக் கவனி

யுங்கள். அப்புறம் அடியெடுத்து வைக்கலாம்'' என்றார்கள். கிரிப்ஸ் பேச்சு ஏன் முறிந்தது என் பதை விளக்க, நாடு முழுவதும் கூட்டங்கள் நிகழ்ந்தன.

8

ஏப்ரல் ஆரும் தேதி, நாடு தேசீய வாரம் கொண் டாடியது; ஏப்ரல் பதின்மூன்றும் தேதி, ஜலியான் வாலா பாக் நினைவுக்கு அறிகுறியாக, வீர வணக் கம் செலுத்தியது; ஜூன் பதினெட்டாம் தேதி, ஜான்ஸி ராணி லட்சுமிபாயின் புண்ணிய தினத் தன்று, கண்ணீர் பெருக்கியது. காங்கிரஸ் பணி யாளரிடையே ஊக்கம் பரவியது. காங்கிரஸ் கமிட்டிகளுக்குப் புத்துயிர் வந்தது. கூட்டங்கள் நடந்தன; ஊர்வலங்கள் புறப்பட்டன; 'நாம் ஏதாவது செய்யத்தான் வேண்டும்' என்பது மக் களின் மனத்தில் பதிந்தது.

இந்தப் புறம் காந்தி, 'பாரதத்தை விட்டுச் செல் லுங்கள்!' என்று அறைகூவினர்.

அந்தப் புறம் நாடு முழுவதும், 'பாரதத்தை விட்டுச் செல்லுங்கள்!' என்று ஒலி எழுப்பியது.

அதிகார வர்க்கம் தன் படைக்கலங்களைக் கூர் மையாகத் தீட்டத் தலைப்பட்டது. இரகசியப் போலீசார் எங்கும் வலை வீசினர்கள். போலீசி

லும் இராணுவத்திலும் சிறையிலும் ஆட்களைச் சேர்த்தார்கள். 'இந்தத் தடவை எவனுவது சிறிது பலவீனம் காட்டினுலும், அவன் ஐந்தாம் படைக்காரன் என்று முடிவுகட்டி, கடுமையான நடவடிக்கை எடுப்போம். ஊக்கம் காட்டினுல் சம்பள உயர்வு கிடைக்கும்' என்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இரகசியத் தாக்கீதுகள் பிறந்தன. இதன் பயனுக, மிகக் குறைந்த பேர்களே பலவீனம் காட்டினர்கள். ஊக்கம் காட்டினவர்களே அதிகம். அவர்கள் துப்பாக்கிக் குழல்களைச் சுத்தம் செய்தார்கள்; பூட்ஸின் அடியில் ஆணிகள் அடித்துக் கொண்டார்கள்; சிறையில் இருண்டிருந்த அறைகளைத் துப்புரவு செய்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் பம்பாய் மகாநாடு வந்தது.

சர்தார் பட்டேல் தமது பிரசங்கத்தில் தீ மூட்டி விட்டார். மௌலானு ஆஜாத் வீராவேசமாகப் பேசினர்; பண்டித நேருவோ, கனலே உமிழும் கொழுந்தாக இருந்தார். ஆனுல் எல்லாரையும் விட அபயனின் நெஞ்சில் பதிந்தவர் காந்தியடிகள்தாம். மலரினும் மெல்லியவராக இருந்த அவர், இப்போது இடியினும் கடுமையானவராகிவிட்டார்.

அவர் பேசினர்—"நான் நாட்டில் அமைதியை விரும்புகிறேன்; ஆனுல், மயான அமைதியை அல்ல. ஆங்கிலேயரான நீங்களோ, அமைதியை நிலவ விட விரும்பவில்லை. பாரத நாடு

போரில் மடிய வேண்டும்; உங்களுக்கு உதவி செய்துகொண்டே இருக்கவேண்டும்; நீங்கள் அதற்கு ஒன்றும் கொடுக்கக்கூடாது என்பது உங்கள் எண்ணம். அப்படியானால் நான் சொல்கிறேன்—அடிமை இந்தியாவின் பிணத்தை முதுகில் சுமந்துகொண்டு, நீங்கள் ஒருகாலும் போரிட முடியாது. அதை விடுங்கள். அப்பொழுது உங்கள் பாரம் மிகவும் இலேசாகியிருப்பதைக் காண்பீர்கள். அந்தப் பிணத்துக்கும் உயிர் வந்துவிடும்; அதுவும் உங்கள் சார்பில் போரிடத் தொடங்கும்.

"ஆயினும் நீங்கள் இதனை விரும்பவில்லை. 'நாங்கள் ஆபத்தில் இருப்பதனால் எங்களுக்கு எல்லா வகையிலும் உதவுங்கள்; ஆனால் உங்கள் விஷயத்தை இப்போது ஒன்றும் பேசவேண்டாம்; பிறகு பார்க்கலாம்' என்றே நீங்கள் கூறுகிறீர்கள். இனிமேல் இது நடக்காது. 'நாங்கள் செயலாற்றுவோம் அல்லது மடிவோம்' என்று நான் நிச்சயம் செய்துவிட்டேன். என்னுடன் எவரும் வராவிட்டாலும், நான் தனியாகவே இவ்வழியில் நடப்பேன்; ஏனெனில், இதைத் தவிர வேறு போக்கு இல்லை என்று இப்போது எனக்கு நம்பிக்கை விழுந்துவிட்டது. இதற்குப் பின்பு நாட்டில் மீண்டும் என்ன நடந்தாலும் அதற்குப் பொறுப்பாளி நானல்ல; நீங்களே. நாடு முழுவதிலும் இனி என்ன நடந்தாலும் சரி, என் கையைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ள மாட்டேன்."

அபயன் மிகுந்த கவனத்துடன் காந்தியடிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தான். ஒவ்வொரு சொல்லும் தெளிவாகவும் உயிருள்ளதாகவும் வெளிவந்தது. யுகத்தின் வாக்கு அதில் ஒலித்தது. பொருத்தமின்மையோ கூச்சமோ பலவீனமோ எங்கும் புலப்படவில்லை. பாரதநாட்டில் குவிந்துள்ள சக்தி முழுவதும், புண்ணியம் முழுவதும், அந்த ஒரு மகாத்மாவாக வடிவெடுத்துக் காட்சியளிக்கிறதோ என்று தோற்றியது. அபயன் சொக்கிப் போய் நின்றான்.

காந்தி மற்றுமொரு விஷயம் சொன்னார்; அது அவன் சிந்தனையை நீண்ட தொலைவுக்குக் கொண்டு சென்றது.

"நான் நினைப்பதும் செய்ய விரும்புவதும், பாரத நாட்டை மட்டும் நோக்கத்தில் கொண்டு அல்ல; உலகம் முழுவதையுமே நோக்கத்தில் கொண்டிருக்கிறேன். நான் எல்லா நாடுகளுக்கும் நண்பனாக இருக்க விரும்புகிறேன். நான் ஆங்கிலேயருக்கும் நண்பன்; உலகத்தில் போரிட்டுக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கும் நண்பன். இன்று உலகம் அழிவதைக் கண்டு என் உள்ளம் அழுகிறது. மனிதன் அடியோடு வீழ்ச்சியடைந்திருக்கிறான்; விலங்காகியிருக்கிறான். இப்போது நிகழும் இவையெல்லாம், நான் வாழ்நாள் முழுவதும் கொண்டிருக்கும் கொள்கைக்கு அறைகூவல். நான்கு புறமும் ஹிம்சைத் தீ பரவியிருக்கையில், அஹிம்சையில் முழு நம்பிக்கை கொண்ட நான்

எப்படிச் சும்மா உட்கார்ந்திருக்க முடியும்? நான் செயலற்று அமர்ந்திருந்தால், 'அட பைத்தியமே, நான் உனக்கு ஓர் இரத்தினம் கொடுத்திருந்தேனே. சமயத்தில் அதை நீ ஏன் பயன்படுத்தவில்லை?' என்று என் இறைவன் என்னைக் கேட்பானே; அதற்கு நான் என்ன பதில் சொல்வது? ஆகையால், நான் எதைக் கொள்கையாக மதித்திருக்கிறேனே அதைச் செய்வது அல்லது இறந்து விடுவது என்பதுதான் 'எனது கடமை'. நான் இந்தியாவை மட்டுமின்றி, உலகம் முழுவதையுமே தட்டியெழுப்ப விரும்புகிறேன்; 'உன் வழி தவறு; அதை விட்டுவிடு' என்று அறிவிக்க விரும்புகிறேன். ஆனால் என் நாட்டிலேயே நான் ஒன்றும் செய்ய முடியாமற் போனால், உலகத்துக்கு எந்த முகத்தைக் கொண்டு இதைச் சொல்ல முடியும்? ஆகவே, விடுதலையை நாங்கள் பெற்றே தீரவேண்டும். அது கிடைத்து விட்டால் நான் உலகத்தினிடம், 'நீங்கள் ஹிம்சையை விட்டுத் தொலையுங்கள்' என்று சொல்ல முடியும்; அப்போது உலகமும் என் பேச்சைக் கேட்க இயலும். ஆனால் இன்று நான் என்ன சொல்ல முடியும்? நானே கதியற்றவனாக இருக்கிறேனே!

"ஆயினும் இனி நான் கதியற்றவனாக இருக்க விரும்பவில்லை. நான் ஆங்கிலேயரின் பழைய நண்பன். இன்றும் அவர்கள் தேடினால், அவர்களது சட்டைப்பையில் நான் இருக்கிறேன். நான் சொல்லும் வழி, அவர்களுக்கும் நல்லது. அவர்கள்

அதை ஒப்புக்கொண்டு, இந்தியாவுக்கு விடுதலை தந்துவிட்டால், உலகம் முழுவதிலும் ஒரு மந்திர சக்தியைப் போன்ற விளைவு ஏற்படும்; போரின் உருவமே மாறிவிடும். என் போர், இந்தியாவின் நலனுக்காக மட்டுமல்ல; உலகின் நலனுக்காகவுந்தான். ஆனால் ஆங்கிலேயர் அதை ஒப்புக் கொள்ளாவிட்டால், இனிப் பொறுத்திருக்க என்னிடம் பொழுது இல்லை. உலகில் ஹிம்சை இப்படி வளர்ந்து கொண்டிருக்கையில், நான் சும்மா இருக்க முடியாது. நான் செய்வேன் அல்லது சாவேன். அது என் தர்மம். இவ்விரண்டைத் தவிர, மூன்றுவது பேச்சு என்னிடம் இல்லை.”

அடிகள் பேசியபோது அவருடைய முகத்தோற்றம் இருந்த நிலையை அபயன் ஒருபோதும் மறக்க மாட்டான். மலர்போல் மென்மை வாய்ந்திருந்தவர், அன்று இடிபோலக் கொடுமுழக்கம் செய்தார். சந்தடியற்ற அந்த இரவில், ஆண்களும் பெண்களுமாகப் பேரவையில் குழுமியிருந்த எல்லையற்ற அந்த மக்கள் கூட்டம் விடுதலை மந்திரத்தில் மயங்கி, பாரதநாட்டு ஆன்மாவின் வாக்கை—ஒவ்வொரு சொல்லையும் விடாமல்—உள்ளத்தில் பதித்துக் கொண்டது. சுற்றுப்புற மெங்கும் ஒப்பற்ற தூய்மை! நாம் எழுகிறோம், மேலே எழுகிறோம் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. காலத்திரையிலே இந்தக் கணங்கள், அழியாத அடையாளத்தை நிச்சயமாக விட்டுச் செல்லும் என்றே தோற்றியது.

ஒரே பிரசங்கம் புரட்சியை விளைவித்த நிகழ்ச்சிகள் உலக சரித்திரத்தில் எத்தனையோ இருக்கின்றன. அன்றைப் பிரசங்கம் அந்த வகையைச் சேர்ந்தது.

அபயன் உணர்ச்சிவசமானன். ஏதோ ஒரு தெய்விகச் சக்தி தன்னுள் நடமாடுவதாக அவனுக்குத் தோன்றியது. 'இவர் எத்தகையவர், இறைவனு அல்லது அவதாரமா என்பதெல்லாம் ஆண்டவனுக்குத்தான் தெரியும். தமக்காக இவர் ஒரு தடியும் கோவணமும் தவிர வேறு ஏதும் வைத்துக் கொள்ளவில்லை. இவர் தம் வீட்டை எரித்துவிட்டு எல்லாருடைய வீடுகளையும் அழிக்க விரும்புகிறார். செத்து வாழும் பாடத்தைக் கற்பிக்கிறார். இவரது உள்ளத்தில், மனித இனம் அனைத்துக்குமாக, இரக்கமும் அன்பும் நிரம்பியிருக்கின்றன. பாரத நாட்டின் ஆன்மிகப் பசி அவ்வளவும், இவரைக் கண்டதும் அடங்கி ஆறுதல் பெறுகிறது. பாரத மக்கள் இவருடைய மூச்சில் தாங்கள் உயிர்த்திருப்பதை உணருகிறார்கள். இவருடைய உள்ளத் துடிப்பில், பாரதத்து ஆன்மாவின் இதயம் ஒலிக்கிறது. நாடு முழுவதுமே இவராக வடிவெடுத்து விளங்குகிறது. உண்மையில் காந்தி ஒரு தனி மனிதரல்ல; நாட்டின் எழுச்சி இவர்! இவருடைய யுகத்தில் பிறந்து, இவரைக் கண்டு தூய்மைபெற்ற நாம் எவ்வளவு பாக்கியசாலிகள்! வரும் தலை முறையினர் நமது இந்தப் பாக்கியத்தை நினைந்து ஏன் பொறுமைப்படலாகாது?' என்று அவன் எண்ணலானன்.

அவன் மனத்துக்குள்ளேயே அவரைப் போற்றினான்; எதனாலோ, தன் கண்ணில் நீர் துளும்புவதைக் கண்டான்.

9

காந்தியின் சொற்கள் மக்களின் காதில் ஒலித்துக் கொண்டிருந்த இதே சமயத்தில், ஆகஸ்டு எட்டாம் தேதியன்று, அந்தக் காரிருளில், கடகட வென்று போலீசாரின் மோட்டார் வண்டிகள் ஓடிய ஒலியும், இராணுவத்தினரின் டப்-டப் என்ற பூட்ஸ் சத்தமும் பம்பாய்த் தெருக்களில் எதிரொலித்தன. இரவோடு இரவாக, மகாத்மா காந்தியையும், சர்தார் பட்டேலையும், ஜவாஹர்லால் நேருவையும், மௌலானா ஆஜாதையும், காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் அனைவரையும் கைது செய்து, ஸ்பெஷல் வண்டிகளில் புனாவுக்கும் அகமது நகர்க் கோட்டைக்கும் அனுப்பி வைத்தார்கள். அங்கே அவர்களைக் கடுங்காவலில் வைக்க முன்னமே ஏற்பாடு ஆகியிருந்தது.

தலைவர்களைக் கைது செய்ததனால், ஏற்கனவே கொதித்திருந்த மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். 'கோவாலியா டாங்கி'ல் பாரதக் கொடிக்கு வணக்கம் செலுத்த அபாரமான மக்கள் கூட்டம் குழுமியிருந்தது. அந்தக் கூட்டத்தின்மீது போலீசார்

குதிரைகளைப் பாய விட்டார்கள்; கண்ணீர்ப் புகைக் குண்டுகளை எறிந்தார்கள். பம்பாய் நகரில் இருபத்துமூன்று முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இதனால் பஸ்கள் எரிந்தன. டிராம், ரெயில் தண்டவாளங்கள் பறித்து எறியப்பட்டன. தந்திக் கம்பிகள் வெட்டுண்டன. மக்கள் தமக்குத் தோன்றியதை யெல்லாம் செய்தார்கள். அவர்களைத் தலைமை தாங்கி நடத்துகிறவர், அவர்களுடைய ஜீவநாடியை அறிந்தவர், அவர்களைத் தமது வசமாக்கும் வல்லமை வாய்ந்தவர்—இத்தகைய மகாத்மா, முன்னமே சிறையில் அடைபட்டிருந்தார்.

நாட்டில் ஹிம்சையையும் அராஜகத்தையுமே சர்க்கார் நிலைநாட்ட விரும்பியதோ என்று தோற்றியது. பாரத நாட்டு மக்கள் இனிப் பல ஆண்டுகளுக்குத் தலைதூக்க முடியாதபடி இரக்கமில்லாமல் கொடுமையாக அவர்களை அடக்கித் தன் தடியரசை நிலையாகவும் பாதுகாப்புடனும் வைத்துக் கொள்வதில் சர்க்கார் முனைந்தது.

பாரத மக்களும், 'இந்தத் தடவை வல்லமை யோடு வல்லமையைப் போராட விடவேண்டியது தான்' என்று முனைந்திருந்தார்கள். எதற்கு எடுத்தாலும் போலீசார் டபார் டபார் என்று சுட்டார்கள். மக்களில் நால்வர் அல்லது ஐவர் படபட வென்று இறந்து போவது சாதாரண நிகழ்ச்சியாயிற்று. குருதி பெருகாத நாளே இல்லை.

மக்களும் சில இடங்களில் மனம் போனபடி நடந்துகொண்டார்கள். போலீஸ் டாணைக்களை அவர்கள் முற்றுகை யிட்டார்கள்; சர்க்கார் கஜானைக்களைக் கொள்ளை யிட்டார்கள்; சர்க்காரின் படைக் கலங்களைப் பறித்துக் கொண்டார்கள். கோர்ட்டுகளையும், சர்க்கார் கச்சேரிகளையும் கொளுத்தினர்கள். இரண்டோர் இடங்களில், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கொல்லவும்பட்டனர். ரெயிலைக் கவிழ்க்கவும், பாலத்தை இடிக்கவுங்கூட எப்பொழுதாவது முயற்சிகள் நடைபெற்றன.

ஏட்டிக்குப் போட்டியாக, சர்க்காரின் அடக்குமுறைத் தாண்டவம் பயங்கர உருவெடுத்தது. பல கிராமங்களை இராணுவத்தினர் ஒரேயடியாகச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் மக்களின் வீடுகளில் புகுந்து, அங்கிருந்த பாத்திரம் பண்டங்களை ஜப்தி செய்தார்கள், ஆண்களைக் கைது செய்தார்கள். பெண்கள், துப்பாக்கி முனையிலுள்ள கத்திகளின் நிழலில் ஊர்வலம் வந்தார்கள். இராணுவத்தினர் விலங்குகளாகி, பெண்களின் கற்பை அழித்ததாகவும் கூக்குரல்கள் கேட்டன.

காந்தியைப் பின்பற்றியவர்கள், தம்மாலான வரையில் உயிரையும் பணயம் வைத்து அமைதியை நிலைநாட்ட முயன்றார்கள். "மக்கள் எந்த நிலையிலும் ஹிம்சைச் செயல் மட்டும் செய்யவேண்டாம்; வேறு எதையும் செய்யட்டும். சாகத்தான் வேண்டுமென்றால் அஹிம்சைக்காகவே சாவோம்.

எதிரிக்கு எதிராக விரலைக்கூட அசைக்கலாகாது; பார்வை சிறிதும் மாறக்கூடாது; உள்ளத்திலும் பகை வேண்டாம்" என்றார்கள்.

ஆனால் நாட்டிலே ஒரு பெருங் கூட்டம், "செய்வோம் அல்லது சாவோம் என்று காந்தியே சொல்லிச் சென்றிருக்கிறாரே. செய்வோம் என்றால், 'எல்லாவற்றையும் செய்வோம்; செய்வதில் எவ்வகைக் குறையும் விட்டு வைக்க மாட்டோம்' என்று பொருள். நாங்கள் கட்டாயம் சாவோம்; ஆனால் கொன்றுவிட்டுச் சாவோம்; நோக்கம் ஏதுமின்றி வீணாகச் சாகமாட்டோம்' என்று பேசியது.

இரண்டு கட்சியினரும் தத்தம் ஆற்றலுக்கேற்பச் செயலாற்றினார்கள். காந்தீயவாதிகள் உடல்-பொருள்-ஆவியைத் தந்து ஹிம்சையைத் தடுக்க முயன்றார்கள். மறுகட்சியினர், காந்தியின் சிறைவாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஹிம்சை வழியில் முன்னேறினார்கள். "இது புரட்சி. நாடு முழுவதும் கொந்தளித்திருக்கிறது. நெருப்புப் பற்றி எரிகிறது. காந்தீயவாதிகளான இவர்களுக்குப் புத்தகங்களிலுள்ள தத்துவந்தான் தெரியும்; உலக உண்மை தெரியாது. அடக்கத்தினாலும் அமைதியினாலும் எங்காவது புரட்சி விளைவதுண்டா!" என்று அவர்கள் கூறினார்கள்.

பாரதநாட்டுச் சிறைகள் முட்ட முட்ட நிறைந்து கிடந்தன; அரசியல் கைதிகளுக்காகப் புதிய 'பாரக்கு'கள் கட்ட வேண்டியதாயிற்று. வயது வந்த எவனாவது ஓர் இளைஞன் சிறைக்கோ போர்

முனைக்கோ செல்லாத வீடே எதுவும் இல்லை. துயரமும் பிரிவும், அவமானமும் பழியும், தடங்கலும் முகஸ்துதியும் எங்கும் பரவியிருந்தன. அடக்குமுறையின் கொடுமை தாங்காமல், இயக்கத்தின் இடுப்பு ஒடிந்துவிடும்போலத் தோற்றியது. தலைவர்கள் இல்லாமையால் மக்கள் உற்சாகமிழந்தார்கள். நாட்டில் எங்கும் பிணச் சோர்வு பரவியது. நாட்டின் ஒளிக்குரல்களைத்தான் சர்க்கார் முன்னமே சிறைகளில் அடைத்து, மென்னியை முறித்துவிட்டதே! வெளியே மயான அமைதி சூழ்ந்திருந்தது. மக்கள் தலைவன் எவனும் சிறைக்கு வெளியே இல்லை. எனவே மக்கள் யாருடைய வல்லமையைச் சார்ந்து நடப்பார்கள்?

10

பம்பாயில் தலைவர்கள் கைதான பிறகு, எஞ்சியிருந்தவர்களைத் தேடிப் பிடித்து, அவர்களைக் கொண்டு ஓர் இரகசியக் கூட்டம் நடத்த ஏற்பாடாயிற்று. அபயனையும் இதற்கு அழைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒருவர், டைப் செய்த திட்டமொன்றை வெளியிட்டார். காந்தியடிகள் வெளியே இருந்தால் இந்தத் திட்டத்தைத் தான் கூறுவார் என்று அவர் சொன்னார்.

சத்தியாக்கிரகத்தையும், அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட திட்டத்தைத் தவிர வேறு எதையும் கடைப்பிடிக்கலாகாது என்று காந்தீயவாதிகள் கூறினர்கள். "எங்கள் திட்டப்படி ரெயில் தண்டவாளங்களைத் தகர்க்கலாம்; தந்திக் கம்பங்களை வெட்டலாம்; எவ்வகையிலாவது போருக்குத் தடை விளைவிக்கும் எந்தச் செயலையும் செய்யலாம்" என்று கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் சொன்னர்கள்.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஒரு வேண்டுகோள் வெளியாயிற்று. 'காங்கிரஸ் பணியாளர்கள் இதைத் தங்கள் பிரதேச நிலையங்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும்; அதற்கு முன்னால் அவர்கள் கைதாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று தாக்கீது வந்தது. குறிப்பிட்ட இடத்தில் இந்த வேண்டுகோள் செய்தியைக் கொண்டு சேர்த்துத் தமது பொறுப்பை நிறைவேற்றுதவரையில், இந்தப் பணியாளரைச் சிறைப்படுத்த வழியும் இல்லை. அபயனுக்கும் இந்த வேலையை ஒப்படைத்தார்கள்.

அபயன் எப்போதுமே கதர்ச் சட்டையும் வேட்டியும் அணிவது வழக்கம். பொதுவாகத் தேசீயப் பணியாளர்கள் அணியும் உடை இது. இந்த உடுப்பில் அவன் புறப்பட்டால், சிறைப்படுவது திண்ணம். ஆனால் காங்கிரஸ் துண்டுப் பிரசுரங்களின் கட்டுக்களை நாக்பூருக்குக் கொண்டு போய்ச் சேர்க்காமல் அவன் கைதாக விரும்பவில்லை. அது

இப்போது அவனுடைய தேசீயக் கடமை. போலீ சார் ஒருவேளை முற்றுகையிட்டால் முதலில் அவன் உயிர் போகும்; பின்புதான் துண்டுப் பிரசுரங்கள் அவர்களின் கைக்குக் கிட்டும்!

பம்பாயில் கண்ணெதிரே நிகழ்ச்சிகளைக் கண்ட வனுதலால் அவனது உள்ளத்தில் வெறிபோன்ற ஆவேசம் நிலவியது. காந்தி கைதான பிறகு மூண்ட தீயின் கொழுந்துகள் வீட்டுக்கு வீடு பரவி யிருந்தன. நாடு பைத்தியமாகியிருந்தது. மூலைக்கு மூலை, ஊருக்கு ஊர், வீட்டுக்கு வீடு ஒரே குரல் தான் ஒலித்தது—'செய்வோம் அல்லது சாவோம்.'

ஆம், இது திருவிழாக் காலம்; விடுதலை பிறக்கும் வேளை; பாரதநாடு எழுச்சி கொள்ளும் சமயம்! கண்ணெதிரே சரித்திரம் உருவாகிறது. இப்பொ ழுது கண்முன்னால் 'நாடு' என்னும் ஒரே காட்சி தான் தோன்றுகிறது. 'நாட்டின் குரல்' என்ற ஒரே குரல்தான் காதில் விழுகிறது. உள்ளத்தி லுள்ள ஒரே துடிப்பு, 'நாட்டுப்பற்று' என்பது தான். ஒரே ஓர் ஆற்றல், நீண்ட சந்திப்புக்காக, ஆன்மாவைக் கூவியழைக்கிறது; அந்தச் சக்தி தான் பாரதத்தின் ஆன்மா. சொந்த இன்ப துன் பங்கள், தன்னலம், உலக விவகாரம் ஆகியவை இந்தச் சமயத்தில் எதற்கு? வாழ்வின் ஒவ்வொரு மூச்சும், உடலின் ஒவ்வொரு துளி இரத்தமும் நாட்டுக்கு அர்ப்பணம். இந்த நாட்டு மண்ணி லுள்ள உணவினாலும் நீரினாலும் இந்த உடல் வளர்ந்திருக்கிறது. ஆ ம ா ம், அனைத்தையும்

கொடுத்துவிட வேண்டும்; நம்மிடம் எதையும் வைத்துக்கொள்ளக் கூடாது. எவன் கொடுக்கிறானே அவனுக்குத்தானே கிடைக்கிறது! கொடுக்கும் இந்தக் களிப்பில்தான் அபயன் துள்ளியெழுந்தான்.

பழைய இராணுவ உடைகள் விற்கும் கடையிலிருந்து அவன் காக்கி உடுப்பொன்றை வாங்கிக் கொண்டான். காக்கி உடை, தொப்பி, பூட்ஸ் முதலியவை அணிந்ததும் அவனைத் தெரிந்து கொள்வதே சிரமமாக இருந்தது. தோல் ஸூட் கேஸில் துண்டுப் பிரசுரங்களை மறைத்து வைத்துக்கொண்டு, கையில் பிரம்பைச் சுழற்றிக் கொண்டு, எவனோ இராணுவச் சிப்பாய் விடுமுறையில் செல்வதுபோல, அவன் சுற்றிவரலானான். மெயில், எக்ஸ்பிரஸ் வண்டிகளைப் போலீசார் கடுமையாகக் கண்காணித்து வந்தார்கள்; ஆகையால் அவன் இரவு பாசஞ்சர் வண்டியில் புறப்பட்டான். எந்த இடத்தில் பொழுது விடிந்தாலும் வண்டியிலிருந்து இறங்கிவிடுவான். பகல் முழுவதும் சத்திரத்திலோ ஹோட்டலிலோ தங்கியிருப்பான். இரவில் மீண்டும் ரெயிலில் ஏறிக் கொள்வான். பதினைறு மணி நேரத்தில் போய்ச் சேரவேண்டிய நாக்பூருக்கு, அவன் இவ்வாறு மூன்று நாட்களில் போய்ச் சேர்ந்தான்.

நாக்பூர் ஸ்டேஷனை அபயன் அடைந்த பொழுது, இரவு பத்தரை மணி. ஜன்னல் வழியே அவன் வெளியே எட்டிப் பார்த்தபோது, போலீ

சாரின் பெருங்கூட்டமொன்று, மாஜிஸ்திரேட்டுடன் பிளாட்பாரத்தில் சுற்றுவதைக் கவனித்தான். ஒவ்வொரு பிரயாணியையும் அவர்கள் உற்று உற்றுப் பார்த்தார்கள். 'நான் வரும் செய்தி போலீசுக்கு எட்டிவிட்டதோ?' என்று அபயன் நினைத்தான். பெரும்பாலான போலீஸ்காரர்களின் கையில் தடி இருந்ததைக் கண்டான். ஏழெட்டு மிலிட்டரிச் சிப்பாய்களும், கையில் துப்பாக்கி முனையோடு நின்றிருந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர்களிடம் பிஸ்டல்கள் இருந்தன. பம்பாயிலிருந்து காங்கிரஸின் போர்ப் பிரசுரங்களை எடுத்துக் கொண்டு எவனோ வருகிறான் என்ற செய்தி இரகசியமாக அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அந்தப் பிரசுரங்களை அவர்கள் பறிமுதல் செய்தாக வேண்டும். அவனை வரவேற்கத்தான் இந்த ஏற்பாடு!

பிளாட்பாரத்தில் இறங்கினால் கட்டாயம் கைதாவோம் என்று அபயனுக்குத் தெரிந்துவிட்டது. நாக்பூர் பல்கலைக் கழகத்தில் அவன் புகழ் பெற்ற மாணவனாக விளங்கியவன். பல சொற்பொழிவுகளிலும் விவாதங்களிலும் பங்கெடுத்துக் கொண்டவனாதலால் மக்களுக்கு அவனைத் தெரியும். இப்பொழுதோ அவன் அணிந்திருப்பது காக்கி உடை; இதற்கு முன்பு அவன் ஒருபோதும் அணியாத உடை. இன்று இதைப் பார்த்ததுமே அவர்களுக்குச் சந்தேகம் எழும். அவனுடைய ஸூட்கேஸைச் சோதனை போட்டால், அவனுக்கு

அப்புறம் வேறு போக்கே இல்லை. கைதாவதுபற்றி அவனுக்குக் கவலை இல்லை; 'இந்தப் பிரசுரங்கள் காங்கிரஸ் கமிட்டியிடம் போய்ச் சேராவிட்டால் என்ன ஆகும்?'—இதுதான் அவனுக்குக் கவலை. இதற்கு முன்னால் உயிரே போனாலும் அக்கறை இல்லை.

வண்டி நாக்பூருக்கு அப்புறம் போகாது. பார்த்துக்கொண்டே இருக்கையில் அது காலியாகிவிட்டது. அவன் அதில் தனியாக இருந்தாலும் போலீசாரின் பார்வை அவன்மேல் விழத்தான் விழும். இதுவரையில் அவன் ஏன் இப்படித் தனியே உட்கார்ந்திருக்கிறான்? வேறு என்ன செய்வது? எப்படித் தப்பிச் செல்வது?

அவன் சாமான்களைப் பிளாட்பாரத்தில் இறக்கிக் கொண்டு, தொலைவில் இருளில் சுற்றலானான். திடீரென்று, "அடே அபயா, இங்கே எப்படி?" என்ற குரல் அவன் காதில் விழுந்தது.

அவன் திடுக்கிட்டான். கடைசியில் பிடிபட்டு விட்டானே? பின்னால் திரும்பிப் பார்த்தான்.

எதிரே இருந்தவன் 'யூனிபார்ம்' அணிந்திருந்தான்; ஆனால் இது போலீஸ் உடையல்ல; ரெயில்வே உடை.

"யார், பார்க்கவனா?" என்றுகேட்டான் அபயன்.

"ஆமாம், நீ என்னைக் கண்டுகொண்டது ஆச்சரியந்தான். பன்னிரண்டு ஆண்டுகள் பொறுத்துச் சந்திக்கிறோமே; நீ என்னைத் தெரிந்து கொள்வாயோ மாட்டாயோ என்று நினைத்தேன்."

பார்க்கவன் தன்னுடன் மூன்றுவது நான்காவது வகுப்புக்களில் படித்தது அபயனின் நினைவுக்கு வந்தது. இருவரும் சேர்ந்து ஹாக்கி விளையாடுவார்கள். பள்ளியில் ஸ்கவுட் குழுவிலும் ஒன்றுக இருந்தார்கள். இப்பொழுது அவன் ரெயில்வே கார்டாக இருக்கிறான்.

பள்ளியிலோ கல்லூரியிலோ பழகிய பழைய மாணவர்களின் உறுதியான நட்பு, இரத்தக் கலப்புள்ள உறவைவிடச் சில சமயம் வலிமை வாய்ந்ததாக இருக்கும்.

பார்க்கவன் சொன்னான்—"நகரை இராணுவம் சூழ்ந்துகொண்டிருக்கிறது. தலைவர்கள் கைதான பின்பு நாலைந்து முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இதுவரை இருபத்துமூன்று பேர் கொல்லப்பட்டனர் என்கிறான் ஒருவன்; எழுபத்தேழு பேர் இறந்தார்கள் என்கிறான் இன்னொருவன். ஸெக்ரெடேரியட் கொடிக் கம்பத்தில் ஏறி, ஒரு மாணவன் யூனியன் ஜாக் கொடியை இறக்கிக் கொண்டிருந்தானும்; அவனைக் குண்டு போட்டுச் சுட்டார்களாம். நகரில் பல வகையான வதந்திகள் உலவுகின்றன. எது நிஜமோ எது பொய்யோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இப்பொழுது ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கிறார்கள். வெளியே போவது, ஆபத்துக்கு இடமானது. நான்கு புறமும் பீதி பரவியிருக்கிறது."

தினசரிகள் நின்றுவிட்டன. போக்குவரத்துச் சாதனங்கள் மறைந்தன. தந்தி, டெலிபோன்

கம்பிகள் வெட்டுண்டன. 'பார்க்கவன் சொல்லும் செய்திகள், எந்தத் தினசரிச் செய்தியையும்விடக் குறைவா என்ன?' என்று அபயனுக்குத் தோன்றிற்று.

"நீ இந்தச் சமயம் வெளியே போகாதே, அபயா! இருட்டில் அவர்கள் சுட்டுவிட்டாலும் பெரிதில்லை. வீணாக ஏன் உயிரை ஆபத்துக்குள்ளாக்குகிறாய்?" என்றான் பார்க்கவன்.

"ஆனால் பிளாட்பாரமும் ஆபத்திலிருந்து விலகியது அல்லவே! போலீசார் இங்குந்தான் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். ஒவ்வொரு வண்டியின்மீதும் அவர்களுக்குக் கண் இருக்கிறது" என்றான் அபயன்.

"அப்படியானால் வா, என்னுடன் 'குவார்ட்டர்ஸ்'க்குப் போகலாம். இரவு அங்கேயே இரு. நாளைச் செய்தியை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்."

"வேண்டாம் தம்பி; எனக்காக உன் வேலைக்கு உலை வைத்துக்கொள்ளாதே. நான் இதை விரும்பவில்லை."

"அடே நண்பா, பழைய சிநேகிதனுக்காக மனிதன் என்னதான் செய்யமாட்டான்? நீங்கள் எல்லாரும் நாட்டுக்காகப் போராடுகிறீர்கள்; உங்களுக்கு நாங்கள் இவ்வளவுகூடச் செய்யக்கூடாதா? நாங்கள் வயிற்றைக் கழுவும் வெறும் புழுக்கள். உங்களுக்கு இரண்டொரு கணம் பணி செய்யப் பெறும் பாக்கியம் எங்களுக்கு ஏது?"

அபயனின் நெஞ்சம் தழுதழுத்தது. ரெயில்வேக் குரிய கறுப்பு உடைக்குள்ளே பார்க்கவனுடைய தூய உள்ளம் மறைந்திருப்பதை அவன் கண் டான். மனிதனுடைய புறப் போர்வையைக் கொண்டு அவனுடைய உள் மனத்தைக் கண்டறி வதுதான் எவ்வளவு சிரமமானது?

அபயன் ரெயில்வே குவார்ட்டர்ஸுக்குச் செல்ல மறுத்துவிட்டான். ஆகவே பார்க்கவன் அவனை அஜனி லோக்கலில் முதல் வகுப்புப் பெட்டியொன் றில் ஏற்றிவிட்டு, "இந்தப் பெட்டி முழுவதும் காலி. இரவெல்லாம் குறுக்கும் நெடுக்குமாக 'ஷண்டிங்'கில் போய்க்கொண்டிருக்கும். இதிலே யே படுத்திரு. உன்னை யாரும் கவனிக்கவே மாட் டார்கள். விடிகாலையில் வண்டி அஜனிக்குச் செல்ல வேண்டிய பிளாட்பாரத்தில் நிற்கும். அங் கிருந்து இறங்கிச் சிறைக் கட்டடத்தின் பின்வழி யே வீட்டுக்குப் போய்விடு. அந்தப் பக்கத்தில் போலீஸ் காவல் இல்லை" என்றான்.

11

மறுநாள் காலையில் அபயன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அவனுடைய காக்கி உடையைக் கண்டதும் ஓர் இமைப்பொழுதுக்கு அம்மாவினால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியா

வில்லை. ஆனால் அடுத்த கணமே அவள் அவனைத் தெரிந்துகொண்டு, "அடி பெண்ணே விஜயா, இவனுக்குச் சற்றுத் திருஷ்டி சுற்றிக் கொட்டு. நாலு நாளாகப் பசி தாகமே போய்விட்டது. பம்பாய்ச் செய்திகளைக் கேட்டு உள்ளம் நடுநடுங்கியது. அங்கே நடந்த கைது, துப்பாக்கிப் பிரயோகம், தீயிடல், அடிதடி ஆகிய செய்திகளைக் கேட்டு, நீ எப்படித்தான் நல்லபடியாகத் திரும்பி வரப்போகிறாயோ என்று நினைத்தேன். இன்று வந்துவிட்டாய்; இப்பொழுது இன்று நிம்மதியாகத் தூங்குவோம்" என்றாள்.

"அது எப்படி நடக்கும், அம்மா?" என்று கூறிய அபயன் தொடர்ந்து, "இது எரிமலையின் முதல் வெடிதான்; புரட்சியின் ஆரம்பம். இந்த நான்கு நாளுக்குள்ளேயே சிலர் உயிர் துறந்து அமர வீரர்களானார்கள். இனி இந்த நெருப்பு ஊருக்கு ஊர் பரவும். அப்பொழுது என்ன நடக்குமோ, யார் சொல்ல முடியும்? ஆகையால், வீட்டிலிருந்து போனவன் திரும்பி வந்தே தீருவான் என்று எதிர் பார்ப்பது வீண். அப்படியாக வந்தால் இரண்டொரு மணி நேரத்துக்கு வருவான்; ஆனால் இந்த வீட்டைவிடப் பெரிய வீட்டில் வாழ்வதுதான் இன்று பாரதநாட்டுப் பணியாளர்களின் விதியில் எழுதியிருக்கிறது. பெரும் பாக்கியம் வந்ததென்றால், துப்பாக்கிக் குண்டிலோ தூக்குக் கயிற்றிலோதான் அது ஊசலாடும். அந்த நாள் எவ்வளவு பெருமையாக, எவ்வளவு புனிதமாக இருக்கும், அம்மா!"

"ஏன் இப்படியெல்லாம் பெசுகிருய், மகனே? நான்கு புறமும் நெருப்பு எரிகையில் நமக்கு அனல் படாமலிராது என்பது எனக்குத் தெரியும். காந்தியடிகளின் உத்தரவினல் நாடு இதைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தால் இதில் தடை சொல்ல என்ன இருக்கிறது? பெரிய பெரிய தலைவர்கள் சிறை சென்றுர்கள்; எத்தனையோ தாய்களின் மடி சூனியமாகிவிட்டது; பல வீடுகள் அழிந்து போயின — இந்த நிலையில் நம்மைப் போன்ற சாமானிய மக்களும் ஏதோ கொஞ்சம் கஷ்டப்பட வேண்டி யிருக்கிறதென்றுல், இது என்ன பிரமாதம்? நாளைக்கு என்ன நடக்குமோ, ஆண்டவனுக்குத்தான் தெரியும்; ஆனல் இன்று நீ சேமத்துடன் திரும்பி வந்திருப்பதற்கு நான் மகிழ்ச்சி கொண்டாட வேண்டாமா?"

"ஆமாம், அம்மா. இன்று வீடு திரும்பியிருக் கிறேன்; ஆனல் இரவே மீண்டும் புறப்படவேண் டும். ஊரூராகப் பம்பாய்க் காங்கிரசின் செய்தி யைப் பரப்ப வேண்டும். தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைபட்டிருக்கிறுர்கள். மக்கள் வழி தவறிச் சென்றுவிடக் கூடாது; மூண்ட நெருப்பு அணைந்துவிடக்கூடாது. ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டுப் புரட்சியை இப்போது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தியிரண்டில் நிறைவேற்ற வேண்டும். இத்தகைய முகூர்த்தம் அடிக்கடி வருவதில்லை, அம்மா."

"இதெல்லாம் எனக்குத் தெரியாது, மகனே.

இப்போது நடப்பதெல்லாம் இறைவனுடைய தூண்டுதலினுல் நடக்கிறது என்பது மட்டும் நன்ருகத் தெரியும். உனக்கு எது சரியாகத் தோன்றுகிறதோ அதைச்செய். ஆனுல் உன்னைப் பாலூட்டி வளர்த்த தாய் வெட்கப்படும்படியாக எதையும் செய்யாதே. என் உணர்ச்சிகள் உன் வழிக்கு முள்ளாவதை நான் விரும்பவில்லை. எல்லாருடைய மானத்தைப் பற்றிய கவலையும் ஆண்டவனுக்கு உண்டு. அவன் உன்னையும் காப்பான்; என்னையும் காப்பான்."

12

மாறுவேடம் பூண்ட தொண்டர்கள் வாயிலாக, அபயன் அன்று பகலுக்குள் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளருடன் தொடர்பு வைத்துக் கொண்டு, துண்டுப் பிரசுரங்களின் கட்டை அவரிடம் ஒப்படைத்துக் கவலை தீர்ந்தான். நாக்பூரிலிருந்து மூன்று மைல் தொலைவில் ஒரு கிராமத்தில் பணியாளரின் கூட்டம் இரவில் கூடுவதாகவும், அதற்கு அபயன் கட்டாயம் வந்து, பம்பாய் நிகழ்ச்சிகளைக் கூறி வழிகாட்ட வேண்டுமென்றும் செயலாளரிடமிருந்து செய்தி வந்தது. பணியாளர் எல்லாருமே இரகசியமாக அங்குவரப்போகிறார்கள்; போலீசுக்குப் புலன் கிடைக்காதபடி நடந்து

கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் நாலைந்து லாரிகளில் வந்து எல்லாரையும் கைது செய்துவிடுவார்கள். மிகுந்த ஜாக்கிரதை தேவை. "சரி, உத்தரவை முற்றும் நிறைவேற்றுவேன்" என்று அபயன் விடை கூறினான்.

13

தாய் பூஜை செய்ய அமர்ந்ததும், விஜயா தன் படுக்கையறைக்குச் சென்றாள். அபயன் அங்கே படுத்திருந்தான். அவன் முகம் சுவர்ப் பக்கமாக இருந்தது; கண்கள் மூடியிருந்தன. விஜயா மெதுவாகக் கால்மாட்டில் உட்கார்ந்து, தன் கையை அவன் காலில் வைத்தாள். பரிவு நிரம்பிய அந்த ஸ்பரிசத்தினால் அவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, "இது என்ன செய்கிறாய், ராணி?" என்றான்.

"மிகவும் களைத்துப்போய் வந்திருக்கிறீர்கள். காலைச் சற்றுப் பிடித்து விடலாமே என்று நினைத்தேன்."

"வேண்டாம், வேண்டாம். களைத்துப் போகும்படி ஒன்றுமில்லை. படுத்தபடியே இளைப் பாறிக் கொண்டிருந்தேன். இப்பொழுதெல்லாம் நாள் முழுவதும் போலீஸ் தொந்தரவு. ஆகையால் வீட்டிலேயே பொழுதைப் போக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இரவு எங்களுக்குச் சொந்தம்."

"இன்று இரவே புறப்பட வேண்டுமா?" என்று கேட்டாள் விஜயா.

"ஆம் விஜயா. இனி ஒரு நிமிஷம் வீணுக்க முடியாது."

"இன்று இரவு போனல் எப்பொழுது திரும்பு வீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"அதைச் சொல்வது சிரமம். ஆகஸ்டு 9-ஆம் தேதி வெடித்த புரட்சியின் தீக்கொழுந்துகள் மிகத் தொலைவில் பரவியிருக்கின்றன; பரவிக் கொண்டிருக்கின்றன. தலைவர்கள் வெளியில் இல்லாமையால், மக்கள் தவருன வழியில் போகா திருக்க வேண்டுமே என்று பயமாக இருக்கிறது. மக்களிடம் ஆவேசம் நிரம்பியிருக்கிறது; அது வெளியே வெடிக்கப் பார்க்கிறது. அதற்கு நேர் வழி கிடைக்காவிட்டால், தவருன வழியைப் பற்றிக்கொள்ளும். ஆனல் அது இனி அமைதி யாக உட்கார்ந்திராது. ஹிம்சையில் நம்பிக்கை யுள்ள புரட்சிக்காரர்கள், மக்களை ஹிம்சைக்குத் தூண்டிக்கொண் டிருக்கிறார்கள். ஹிம்சை வெளி வர வேண்டுமென்று சர்க்காரும் விரும்புகிறது; ஏனென்ருல் ஹிம்சையை அடக்க அதற்குத் தெரி யும். மக்கள் ஏதாவது ஒரு போலீஸ் ஸ்டேஷனிலோ சர்க்கார்க் கச்சேரியிலோ தீயிட்டால், சர்க்கார் அந்த ஊர் முழுவதையும் கொளுத்திவிடும். சர்க் கார் ஆபீசர் ஒருவர் கொலையுண்டால், முழுக் கூட்டத்தின் மீதும் 'மெஷின்-கன்'னைச் செலுத்தி அது பிணக்காடாக்கி விடும். ஹிம்சையை எப்

படிச் சமாளிக்க வேண்டும் என்பது அதற்குத் தெரியும்; ஆனல் அஹிம்சைக்கு முன்னல் அதன் கொடுக்கு அறுந்து விடும். பயங்கொள்ளித் தனத்தைவிட ஹிம்சை நல்லது; ஆனல் அதைக் கொண்டு பெரிய அளவில் செயல் புரிவது சிரமம். ஒரு ஹிம்சைக்குப் பதிலாகச் சர்க்கார் நூறு மடங்கு கடுமையான ஹிம்சையைத் திருப்பித் தந்தால், மக்கள் மனமிடிந்து உட்கார்ந்துவிடுவார்களே என்று அஞ்சுகிறேன். இந்த நிலையைக் கட்டாயம் தடுக்க வேண்டும். இதற்காகத்தான் என் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தப் போகிறேன்" என்ருன் அபயன்.

"ஆனல் இந்தச் செயலே நீங்கள் எத்தனை நாளைக்குச் செய்ய முடியும்? பக்கத்து வீட்டு ராவ் சாகப்பின் பிள்ளை சொல்லிக்கொண்டிருக்கிருன்—முந்தாநாள் அவன் வீட்டில் இரகசியப் போலீசார் உங்களைப்பற்றி விசாரணை செய்ய வந்தார்களாம். ஒருவேளை உங்களைக் கைது செய்ய ஏற்பாடு நடக்கிறதோ என்னவோ!" என்ருள் விஜயா.

"ஆம், இருக்கலாம். போலீசார் விசாரணை நடத்தும் போக்கைப் பார்த்தால், சிறிதளவு சந்தேகத்துக்கு இடமானவன்கூடச் சிறைக்கு வெளியே இருக்கமுடியாது என்று தோற்றுகிறது. கைதாகிவிடுவது எளிது. இப்பொழுதே நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் சென்ருல் உடனே என்னைப் பிடித்துவிடுவார்கள். ஆனல் இதனல் வேலை எப்படி நடக்கும்? நிறையப் பணியாளர்கள்

கைதாகாமல் தப்பியிருந்து, புரட்சிப் பிரசாரம் செய்வதே இன்றைய தேவை. அவர்கள் ஓயாமல் சுற்றவேண்டும். ஓர் இரவுக்கு மேல் ஓரிடத்தில் இருப்பதும் அரிது. போலீசாரின் கூட்டம் ஓயாமல் கண்காணித்து வருகிறது.”

“ஆம், அது நடக்கத்தான் நடக்கும். ஆனால், நீங்கள் என்ன சொல்லிப் பிரசாரம் செய்வீர்கள்?”

“என்ன சொல்வேன்? பம்பாயிலிருந்து வந்த துண்டுப் பிரசுரங்களில் எழுதியிருப்பதைத்தான் சொல்வேன். அந்தக் கட்டளை ஊருக்கு ஊர் பரவி, மக்கள் போருக்கு ஒத்துழையாமல் இருக்க வேண்டும்; சட்டங்களை மீற வேண்டும்; எந்த வகையிலாவது காந்தியின் ஆணைப்படி நடந்து வெளிநாட்டு ஆட்சி என்னும் யந்திரத்தை டபக் என்று நிறுத்திவிட வேண்டும். மக்கள் அமைதியாக இருக்கும் இடத்தில் போலீசார் ஹிம்சையைக் கிளப்பி வருகிறார்கள்; ஏனென்றால் அவர்கள் மீண்டும் படைக்கலங்களை எடுக்க, அதனால் சாக்குப்போக்குக் கிடைக்கிறது. இது பயங்கரமான ஒரு விஷயம்; இதிலிருந்து மக்களை முடிந்த வரையில் காக்க வேண்டும்.”

“ஆனால் நீங்கள் அதிக நாளைக்குச் சுதந்திரமாகச் சுற்ற முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. பிடிபட்டால் எத்தனை நாளைக்குச் சிறையில் இருக்கவேண்டி வரும்?”

“சிறையில் அழுகிக் கிடக்க நான் விரும்பவில்லை, விஜயா. என்னால் முடிந்த வரையில்